# கனகமணி



சிவநெறிப் புரவலர், சிவதர்மவள்ளல்

## கலாநிதி க. கனகராசா

அவர்களின்

21 - 08 - 1998 நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



'' மில்க்வைற் தொழிலதிபர் ''

சிவநெறிப் புரவலர், சிவதர்மவள்ளல்

# கலாநிதி க. கனகராசா (ஜே. பி.)

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு வெளியீடு

21 - 08 - 1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடைய எதை இழந்தாய்.
எதற்காக நீ அழுகிறாய்? எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாகுவதற்கு
எதை நீ எடுத்துக்கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறோருவருடையதாகும். இந்த மாற்றம் உலக நியதியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

*சிவநெறிப்புரவலர், சிவதர்மவள்ளல்*

# கலாநிதி க. கனகராசா (ஜே.பி.)



*அன்னையின் மடியில்:*
**02 – 11 – 1927**

*ஆண்டவன் அடியில்:*
**22 – 07 – 1998**

**திதிவெண்பா**

ஆண்டுவெகு தானியத்தில் அம்மாடி யீர்மூன்றில்
தூண்டு சதுர்த்தித் திதிதுலங்க — ஈண்டுபுகழ்
மிக்களங்கள் நாயகனாம் மேன்மையுறு கனகராஜன்
சொக்கனடி சார்ந்த தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மில்க்வைற் தொழிலதிபர்

# கலாநிதி க. கனகராசா ஜே.பி. அவர்கள் வரலாற்றுச் சுருக்கம்

## குடும்பத் தோற்றம்

1927 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணையில் ''ஆள்வினையே ஆடவர்க்கு உயிர்'' என்ற பழந்தமிழ் கருத்திற்கேற்ப திரு. வீ. மு. கந்தையா என்பவர் மிகச் சொற்ப மூல தனத்துடன் சவர்க்காரத் தொழிலை மேற்கொண்டார். இவரது தொழிலகம் சிறுகுடிசையாக இருந்து, பின் தகரக் கொட்டகைகளாக மாறிப் பின்பு மேல்மாடிக் கட்டிடங்களுடன் உயர்ந்து விளங்கும் நிலைமைக்குத் திரு. வீ. மு. கந்தையாவின் விடா முயற்சியும், தன்னம்பிக்கையும், கட்டுப்பாடுமே காரணமாகும். திரு. வீ. மு. கந்தையா என்பவர் திருமணம் பெறும் காலம் அமைந்ததும் அவரின் தந்தையாராகிய வீ. முருகேசம்பிள்ளை என்பவர் யாழ்ப்பாணத்துக் கொட்டடி என்னும் ஊரில் வாழ்ந்த செல்வர்பிள்ளையின் மகளாம் மீனாட்சிப்பிள்ளை என்பவரை மனைவியாக்கி மனைமாட்சியுறச் செய்தார். திரு. வீ. மு. கந்தையா அவர்கள் மங்கல வாழ்வின் நன்கலனாக ஐந்து ஆண் மகவும் இரு பெண் மகவும் பெற்றெடுத்தார். ஆண்மக்களில் மூன்றாவதாக அமைந்தவரே நம் இன்றைய மதிப்பிற்கும், பாராட்டுக்குமுரிய மில்க்வைற் தொழிலதிபர் திரு. க. கனகராசா, ஜே.பி. அவர்கள். திரு. வீ. மு. கந்தையா அவர்கள் போதிய வசதிகள் அற்றநிலையில், விற்பனைச் சந்தையிற் பெரிய பெரிய அந்நியர் உற்பத்தி ஸ்தாபனங்களுடன் போட்டி போட்டுத் தம் சவர்க்காரத்தைத் தொடர்ந்து விற்பனை செய்து கொண்டிருந்தமையால் இவரை எல்லோரும் சவர்க்காரக் கந்தையா என்பார்கள் முஸ்லீம் சகோதரர் மத்தியில் இவருக்கு நல்ல மதிப்பிருந்தது. அவர்கள் எல்லோரும் இவரை 'கந்தையா அண்ணை' என்று அன்பாக அழைப்பார்கள். தன்னாக்கமான சவர்க்காரத்திற்குச் சோதிடவாசான் அமரர் இராசலிங்கம் அவர்கள் ஆலோசனை வழங்கியதன் மூலம் ''மில்க்வைற் சோப்'' எனப் பெயரிட்டு நீலம் கலந்த விஞ்ஞான சோப் விற்பனையாளராக வியாபார உலகில் திரு. வீ. மு. கந்தையாபிள்ளை விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வியும் கன்னித் தொழிலும்

திரு. வீ. மு. கந்தையா அவர்களுக்கு மூன்றாவது குழந்தையாக முளைத்தெழுந்த திரு. க. கனகராசா அவர்கள் ''கில்னர்'' கல்லூரியில் கல்வி கற்றபின் கம்பளைக்குச் சென்று வியாபாரத் தொழில் பழகினார். அதன்பின் கினிக்கத்தேனையில் உள்ள அரச லாக்கந்தையில் உயர்பதவி வகித்து வந்த இவரின் மூத்த சகோதரன் திரு. க. இரத்தினகோபால் அழைப்பின்பேரில் அத்தோட்டத்திற்குச் சென்று ஆசிரியராகவும், இறப்பர் மேக்கராகவும், கணக்குப் பதிவாளராகவும் வேலைபார்த்திருந்தார். இவ்வாறு இருக்கையில் திரு. வீ. மு. க. அவர்களின் மில்க்வைற் தொழிலிற் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டது. ஏற்பட்டதும் தனயனான திரு. க. கனகராசாவைத் தனக்கு உதவியாக அழைத்துத் தன் தொழிலைப் பயின்றும், மேற்பார்வை செய்தும் மேலும் முன்னேற்றும்படி கூறினார். தந்தையின் சொற்படி திரு. க. கனகராசாவும் நடந்து கொண்டார்.

''சிறுகக் கட்டிப் பெருகவாழ்'' என்ற முதுமொழிக்கேற்ப திரு. கனகராசாவின் நல்லூழ் நயம்பெற இதனால் கருக்கொண்டுவிட்டது எனலாம். இடவசதியோ — இயந்திரக் கருவி வசதியோ — ஆள்வசதியோ — சந்தை வசதியோ இல்லாத போதிலும் தந்தையும் தனயனுமாக இணைந்து மேற்கொண்ட இடைவிடாத முயற்சியின் பேறே இன்றைய ''மில்க்வைற்'' தொழிலகத்தின் தோற்றம் என்க.

## மில்க்வைற் தோற்றமும் வளர்ச்சியும்

திரு. வீ. மு. கந்தையா மில்க்வைற் தொடங்கிய ஆண்டிலேயே திரு. கனகராசா அவர்கள் பிறந்தார்கள். எனவே கனகராசா செல்வச்சீமானாக விளங்கும் நற்கன்மத்தின் மூலப்பொருளும் அவர் தந்தையாரிடம் ஆண்டவனால் அமைக்கப்பட்டதெனலாம். ஓர் ஆன்மாவின் தனு, கரண, புவன போகங்கள் இவ்வாறே இறைவனால் இவ்வுலகில் அருளப்படுகின்றன என்க.

சின்னஞ்சிறிய நிலப்பரப்பிலே மேல் மாடியோடு ''திருவாலவாய்'' என்னும் பெயர்கொண்டு விளங்கும் மனையிலே மேல்மாடி ஒரு கலைக்கூடமாகக் கவினுற, திரு. க. கனகராசா தன் மனையாள் நாகம்மாவோடு நல்லறம் நடாத்தும் இல்லமாக அமைந்துள்ளது. கீழ்மாடியோ, மிக்க அமைதியான சூழலில் மில்க்வைற் சோப் தொழிற்சாலை நடைபெறுகின்றது. அத் தொழிலகம், அலுவலகம், தொழிற்சாலை, மண்டபம், பொதியறை, களஞ்சிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறை என்ற பலபகுதிகளை உடையதாக அமைந்துள்ளது. இப் பல பகுதிகளும் வெறும் பொருளுக்குரிய அங்கங்களாக அமையாது பொருளோடு பொருந்திய அறிவு பெறுமிடமாய் விளங்க நற்சிந் தனை, நல்லொழுக்கம், நீதிவாக்கியம், திருக்குறள் ஆகியவை கூறும் மட்டைகள், பலகைகள், நிரைநிரையாக ஆங்காங்கே தொங்கி அழகு பொலிவனவாகவுமுள்ளன. யன்னற் கம்பிகள் வாயிற் கதவுகள் எங்கும் சிவலிங்க உருவம் திரிபுண்டரத் திருநீற்றுப் பொலிவுடன் திகழ்கின்றது. இதனால் தொழிலாளர் உழைப்போடு உயர் எண்ணத்தையும் பெற்று உத்தமர்களாக நிலைக்கும் வாய்ப்புப் பெறுகின்றனர் எனலாம். இவ்வாறு மில்க்வைற் தொழிலகம் நூறுபேரைத் தன்னகங் கொண்டு 1977ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பொன் விழாவைக் கண்டு வளர்ச்சிப் பாதையில் பொலிவு பெற்றுள்ளது.

## மில்க்வைற் தொழிலக அதிபராதல்:

தந்தை வீ. மு. கந்தையாபிள்ளையின் தலைமையிற் சவர்க் காரத் தொழில் பயின்ற சிவநெறிப்புரவலர், காலப்போக்கில் எழுதுவினைஞர், கணக்குப்பதிவோர், தட்டச்சாளர் முதலான துணைப்பணியாளர்களின் மத்தியில் காலத்தைப் பெறுமதியாக்கிக் கொண்டு இன்று தலைமைப் பணியாளராக தொழிலக அதிபராகத் திகழ்கின்றார். தன் பணமும், தன்பதவியும், தன்னாணையும் மேலோங்கவேண்டும் என்ற முனைப்பற்று, மற்றையோரின் உழைப்புச் சக்திக்கு இதமளித்து, அடக்கமும் எளிமையும் அன்பும் பூண்டு நிற்றலே தொழிலகத்தின் காவலாகும் என்ற துணிபுற்ற அதிபராகத் திரு. க. கனகராசா அமைந்துள்ளார். இவர் தன் முதலின் பயனாக நயத்தில் முழு உரிமை கொள்ளாது, சமூகத் திற்கும், நாட்டுக்கும் அஃது உரியதாகும் என்ற உள்ளுணர்வோடு ஈதல், இசைபட வாழ்தல் என்பதற்கேற்ப வழங்கும் கொடைத் தனத்தை உடையராயினர். இதனை அறிந்த இலங்கை அரசாங் கமும் அவருக்குச் சமாதான நீதவான் (ஜே.பி.) பட்டம் அளித்துச் சிறப்புச் செய்தது. இதற்கு முன்பே மக்கள் சமூகமும் ''பூலோக கற்பகதரு நாயகர்'' ''தால காவலர்'' ''திருக்குறட் காவலர்'' முதலாம் பட்டங்களை இன்ப அன்பு மீதூரச் சூட்டியுள்ளது இங்ஙனமே நம் ஈழவளநாட்டுச் சைவ ஆதீனங்கள், தமிழகத்தி லுள்ள ஆதீனங்கள் இவரின் தமிழும், சைவமும் வளர்க்கும் சிறப்பினை அறிந்து ''சிவதர்ம வள்ளல்'' ''சிவநெறிப் புரவலர்'' ''செந்தமிழ்ச் செல்வர்'' முதலிய பட்டங்களை அளித்துள்ளன. உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டாரும் ''தொண்டுள்ளம்'' என்று பாராட்டி இவருக்குச் சான்றிதழ் அளித்தமையும் நோக்கற்பால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகும். இவ்வாறு இந்துமதத்திற்கு மட்டுமல்ல, கிறிஸ்தவ, இஸ்லாமிய – பௌத்த மக்களுக்கும் பலகொடைகளைக் கொடுத்துத் தன் சமயப் பொறைக் கோட்பாட்டையும் வெளிப்படுத்தியுள்ளார்கள் திரு க. கனகராசா அவர்கள்.

### பண்பாட்டுப் பணிகள்

இலங்கை மக்கள் அன்னியப் பொருள்களில் மிக்க மோகங் கொண்டு சுதேசிப் பொருட்பற்று அற்று இருந்தார்கள். இந்தச் செம்மையற்ற மனப் போக்கை மாற்ற வேண்டும் என்பதைத் தம் தொழில் அநுபவத்தால் தேர்ந்துகொண்ட திரு. கனகராசா அவர்கள் உடற்தூய்மை, உள்ளத்தூய்மை என்ற எண்ணத்தில் முதிர்வு கொண்டார். உடலுக்குச் சவர்க்காரம் அமைதல் போல உள்ளத்திற்கும் அறிவுதரும் கருத்துநூல்கள் வெளியிடுவது மேலான கடனாக அமையுமென்று சிறுநூல் வெளியீடுகளை இலவசமாக வெளியிட முனைந்து வெற்றியும் கண்டார்.

### சமய நோக்கில்

அன்னார் சைவசமயப் பற்றுள்ளவர். சைவசமயக் குரவர் நால்வரிடமும் நிரம்பிய பற்றுள்ளவர். திருமுறைகளில் பக்தியும், அன்பும் கொண்டவர். சந்தியாவந்தனம், அநுட்டானம், பிராணாயாமம், தியானம் இவற்றில் அசையாத நம்பிக்கையுள்ளவர். தீட்சை, திருநீறு, உருத்திராக்கத்தை விரும்புபவர். தம்மைப் போலச் சைவசமயத்தவரும் ஒழுகுதல் வேண்டும் என்று கருதுபவர். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஐயா, வித்துவான் ந, சுப்பையாபிள்ளை அவர்கள், பிரம்மஸ்ரீ சீதாராம சாஸ்திரிகள், பட்டுச்சாமி ஓதுவார் அவர்கள், கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் எழுதிய, தொகுத்த சைவசமய நூல்களை ஆயிரக்கணக்காக அச்சிட்டு வழங்கியவர்.

திருவள்ளுவர், காந்தியடிகள், சிவானந்தர் முதலான பெரியார்களின் பொன்மொழிகளைக் காலந்தோறும் அச்சிட்டுப் பரப்பியுள்ளார். சுவாமி சுத்தானந்த பாரதியார், அரவிந்த மகான் முதலானோரின் மணிவார்த்தைகளையும், யோகர் சுவாமிகளின் குருவாசகங்களையும் அச்சிட்டுப் பரப்பியுள்ளார். ஆறுமுகநாவலரவர்களின் பாலபாட வசனங்களை அச்சிட்டு எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்துள்ளார். குழந்தைகள் ஏடு தொடங்கும் போது உபயோகமாகும் வண்ணம் பனையோலையில் நவீனமாக அச்சுப்பொறித்த உயிர்மெய் எழுத்துக்கள் கொண்ட ஏடுகளை ஆயிரக்கணக்கில் ஆண்டுதோறும் உபகரித்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவாரம், திருவாசகம், பெரியபுராணம், கந்தரலங்காரம், கந்தரநுபூதி, அபிராமியந்தாதி முதலிய நூல்களிலிருந்து பாடல்கள் பலவற்றை வர்ணத் தகடுகளில் சித்திர வேலைப்பாட்டுடன் எழுதுவித்துக் கோவிற் சுவர்களிலும் மண்டபத் தூண்களிலும் பதித்துள்ளார்கள். நின்றும் இருந்தும் எங்கும் தெய்வீகப் பாடல்களைப் படிக்கவும், பாடமாக்கவும், நினைக்கவும் இவை நல்விருந்தாய் வசதியாய் உள்ளன,

கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்று காஞ்சிப் பெரியார் கூறிய வாக்கியத்தை வர்ணத்துணியில் எழுதுவித்துத் திருக்கோபுரத்தையும் வரைவித்துப் புனிதமான இடங்களில் தொங்கும் வண்ணம் செய்துள்ளார். கோயில்கள் பலவற்றின் வசந்தமண்டபத் திரைச்சீலைகளுக்கு வர்ணப் படம் வரைந்து வழங்கியுள்ளார் திருமுறையோதுவோர், பாதயாத்திரை செய்வோருக்குக் குமிழ் தாளங்கள் வேண்டிய இடங்களில் வழங்கியுள்ளார்.

சிறைச்சாலை, வைத்தியசாலை, அநாதரில்லம், மடங்கள் முதலான இடங்களில் நிலையான சமயப்பணிகள் மில்க்வைற் தொழிலதிபரின் சைவப்பணியை காட்டி நிற்பன. இவை அவருக்கு மன்றங்கள், ஆதீனங்கள் மகிழ்ந்தளித்த **சிவத்தமிழ்ச்செல்வர், சிவநெறிப் புரவலர், சிவதர்ம வள்ளல்** முதலாய பட்டங்கள் சான்று பகருகின்றன.

## விவசாய நோக்கில்

விவசாயப் பணியில் மில்க்வைற் அதிபர் பனைவள விருத்தியே கண்ணாகக் கொண்டுள்ளார். இப் பெருவிருப்பின் விளைவாக தம் காரிலும், தொழிலக வாகனங்கள் அனைத்திலும் பனை பொறித்த மஞ்சள் நிறக் கொடியைப் பறக்கவிட்டிருந்தார். இவர்கள் வருடந்தோறும் பனைவிதைகளைச் சேகரித்துக் குடியேற்றத் திட்டப்பகுதிகளுக்குப் பகிர்ந்தளித்து அவற்றை வளர்க்கச் செய்தார். **''பனையைத் தறிக்காதீர் பயனைக் குறைக்காதீர்''** என்ற வாக்கிய அட்டைகளைத் தயாரித்தும், **''பனைமரசோபனம்'', ''பனையின் பயன'', ''தாலவிலாசம்'', ''பனை வளம்'', நவீன முறையில் பனைவெல்லம்''** என்பன போன்ற சிறு வெளியீடுகளை அச்சிடுவித்தும் விவசாயப்பணியிற் பனைவள விருத்தியைக் கவர்ச்சிகரமான பணியாக மில்க்வைற் அதிபர் செய்துள்ளார். இவை **''பூலோக கற்பகதரு நாயகர்'', ''தாலகாவலர்''** என்ற விருதுப் பட்டங்களை மக்கள் மனமுவந்து அளித்துள்ளமைக்குச் சான்றாக உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனைவளத்தின் பின்னணியாகவே ''முருங்கை'', ''வேம்பு'' ''துளசி'', ''குரக்கன்'', ''பப்பாசி'' போன்றவற்றையும் விருத்தி செய்யச் சிறுநூல்களை விவசாயப்பணி வெளியீடாக்கியுள்ளார், நமது மூதாதையர்கள் இவ் விவசாயப் பணியில் ஈடுபட்டு முதிர்ந்த இனிய இயல்பை இன்றைய தமிழ்மக்களாகிய நாமும் பெறவேண் டும் என்ற அவாவினால் அவர்களின் ''விவசாயப் பழமொழிகளும் விடுகதைகளும்'' அடங்கிய சிறுநூல் ஒன்றைத் தமது பொறுப்பில் வெளிப்படுத்தியுள்ளார். வேற்றவர் பதிப்பான ''நாட்டிற்கு நயம் தருவன'' என்ற ஒரு பெருநூலைப் பணங்கொடுத்து வாங்கி இளம் விவசாயிகள் கழகங்களுக்கும், பிறர்க்கும் விவசாயத்தில் எழுச்சியுற அன்பளிப்புச் செய்துள்ளார். பயிர்த் தொழிலில் நீரை மிகுதியாகப் பயன்படுத்துவதால் யாழ்ப்பாணத்து நன்னீர் உப்பு நீராக மாறும் என்ற விஞ்ஞானிகளின் அச்சக்குரலை அனைவரும் அறிந்துகொள்வதற்காக 'யாழ்குடாநாடும், நீர்வளமும்'', ''நீரைப் பாதுகாப்போம்'' என்ற சிறுநூல்களை வெளிப்படுத்தியுள்ளார். விவசாயிகளுக்கு உதவும்வண்ணம் நாட்டிலுள்ள கழிவுப் பொருள் களைச் சேகரித்துக் கூட்டுரமான பசளையைத் தயாரிக்கும் முறை பற்றிய நூலும் இவரால் வெளியீடப்பட்டுள்ளது. குடியேற்றப் பகுதிகளுக்கு அடிக்கடி சென்று ''பூமி திருத்தி உண்'', ''காட்டை வெட்டி களனிபாக்குவோம்'' போன்ற வாக்கிய அட்டைகளை அம் மக்களுக்கு அளித்து அவர்களை உற்சாகமளித்து வந்ததும் குறிப் பிடத்தக்கது, ''தாவரங்களை வெட்டாதே'', ''தண்ணீரைவீணாக் காதே,'' ,'சோலையும் மலையும் மழைக்குக் காரணம்'' என்ற வாக்கிய அட்டைகளைப் பரப்பிப் பயிர்வகை, மரவகை, நீர்நிலை இயல்வகை என்ற முறையில் விவசாயப்பணி எம் அதிபரால் விரி வுறும் தொண்டினை நாம் ஈண்டு நன்கு தெளியலாம்.


## சமூக நோக்கில்

சமூகப்பணியில் கல்வி, பெரியோர் நினைவு, மக்களின் சுக வாழ்வு என்பன அடங்கும். கல்விப்பணியில் அநாதர், வறியோர் ஆகியோரது பிள்ளைகளுக்கு படிக்கும் நூல்களை வாங்கிக் கொடுத் தும்; சில பள்ளிகளில் பிரார்த்தனை மண்டபம், குடிநீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்தும், கற்றவர்கள் எழுதிய பல நல்ல நூல் களைப் பணம் கொடுத்து வாங்கி இலவசமாக வழங்கியும், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலான நீதி அடங்கிய ''நீதி நூற்கொத்து'' என்ற சிறந்த நூலை அச்சடித்துக் கொடுத்தும் வந்துள்ளார்.

பெரியோர்ப் பேணலாக திருவள்ளுவர், ஔவையார், மகாத்மா காந்தி என்பவர்களின் உருவச்சிலையை தம் பொறுப்பில் சமைத்து யாழ்நகர் வீதிகளில் ''தமிழ்'' நினைவாக நாட்டி வைத்தும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்புத் தாயாருடனும் தமயனாருடனும்
மில்க்வைற் தம்பதிகள்
ஜே. பி. பட்டமளிப்பின் பின்னர்




யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் ஆராய்ச்சி
மகா நாட்டுக்கு வருகைதந்த பன்னாட்டு
அறிஞர்களுடன் திருவாலவாயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"தேசாபிமானி" பட்டமளிப்பு விழாவில்
டாக்டர் நந்தியிடமிருந்து அதற்குரிய
விருதைப் பெறுதல்



சுவாமி சுத்தானந்த யோகியுடன்
மில்க்வைற் தம்பதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் திருநாட்களில் இவர்களின் படங்களையும் இவர்களது அமுத வாக்கியங்களையும் இலவசமாக அச்சிட்டு வழங்கியும் உள்ளார். இப் பெரியார்களின் நினைவுநாட் போட்டிகளில் பரிசு அளிக்கும் வாய்ப்பு அமையும்போது அதனை நிறைவேற்றியும் உள்ளார்.

சிறப்பாக காந்தியடிகள், ஒளவையார், திருவள்ளுவர் போன்றவர்களின் சிறுசிலைகளைச் செய்தளித்ததும், காந்தியாரின் நீதிக் குரங்கு உருவங்களை ஆக்கிக் கொடுத்ததும் இவரின் அன்புச் செய்கைகளாகும்.

சமூக நலம் நிமித்தம் வீதிகளில் பேருந்து வண்டிகள் நிற்கும் இடங்களில் மக்கள் மழை, வெயில் ஆகியவற்றால் அவதியுறா வண்ணம் பேருந்து தரிப்பு நிலையங்களை அமைத்துள்ளார். திருநெல்வேலி, கந்தரோடை, கொழும்புத்துறை, நந்தாவில், சங்கரத்தை போன்ற ஊர்களில் செயல்திட்ட மாணவர்கள் குளங்களை அகழ்விக்கும் பணியில் ஈடுபட்டபோது அவர்களுக்குத் தேவையான உபகரணங்களை அளித்து அப்பணியில் முன்னோடியாய் நின்றார். தருமபுரம் போன்ற இடங்களில் கிணறுகள் வெட்டுவித்து அவர்களின் நீர்ப்பற்றாக்குறையைப் போக்கியுள்ளார். ஊர்களில் இளம்பிள்ளை வாதம் போன்ற நோய்கள் பரவும் காலங்களில் அந்நோய்களை விளக்கும் துண்டுப்பிரசுரங்களை வெளிப்படுத்தியுள்ளார். இத்துடன் யோகப்பயிற்சியையும் பரப்பி அது தொடர்பான நூலையும், அப்பயிற்சியை விளக்கும் படங்களையும் நமக்கு அளித்துள்ளார். அன்னார் இவ் யோகக்கலையில் நன்கு பயின்றவர் என்பதனை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

இன்னும் சமூகப்பணிக்கு முத்திரையிட்டாற் போல ''மில்க் வைற் செய்தி'' என்ற பத்திரிகை பல்கலைப் புலவர் திரு. க. சி. குலரத்தினம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளியிட்டதை நாம் ஈண்டு குறிப்பிடுதல் வேண்டும். இவ்வெளியீடு தமிழர் பண்பாட்டை வளர்க்கும் — விளக்கும் வகையில் முளைத்து சமூகத் தொண்டு சிறக்க வழிகாட்டும் சால்பில் எழுந்திருக்கின்றது. இன்றைய கதையுலகின் கதவைத் தாழிட்டு, தெய்வசிந்தனையையும், மனித அறிவில் மலர்ந்த அறவுரைகளையும், நெறிகளையும் வெளிப்படுத்தும் களஞ்சிய இதழாக அவ்விதழ் இனிக்கின்றதெனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலை நோக்கில்

ஈழவள நாட்டின் இனித்தெழுகின்ற கலைவளர்ச்சியில் திரு. க. கனகராசா அவர்களுக்கு மிகுந்த ஈடுபாடுண்டு. பண்டிதர், வித்துவான், புலவர் போன்ற இயற்றமிழ்க் கலைஞர்களையும், திரு. பெனடிக்ற் போன்ற ஓவியக் கலைஞர்களையும், திரு. வீ. ஆ. நாகலிங்கம் போன்ற சிற்பக் கலைஞர்களையும் கௌரவித்து ஆக்கமும், ஊக்கமும் அளித்து தம் கலையார்வத்தைத் தணித்துக் கொள்வார். அத்தோடு சிறு கைத்தொழில் வல்லுநர்களின் அழகிய ஆக்கப் பொருள்களைக் கண்ணுறின் அவைகளைக் கைப்பொருள் கொடுத்துப் பெற்றுக் கொள்வார். இதனாலே அவருடைய இல்லம் கலைப்பொருள் மலிந்த இல்லமாக மிளிர்கின்றது. இவ்வில்லத்தில் இதற்கென்றே ஒரு மணிமண்டபம் பொன்விழாக் காலத்தில் அமைத்து உள்ளமையும் நாம் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

## நிறைவுரை

சிவநெறிப் புரவலர் திரு. க. கனகராசா அவர்கள் இம்மைக்கும் மறுமைக்கும் இனிய பயன் செய்யும் பணிகளை மேற்கொண்டிருக்குங்கால் பொதுமக்கள் சிறப்பாகத் தேவைப்படும் தேவைகளை நேரே கண்டு கேட்கும் கருத்துடையவர்களாய் முனைந்து நின்றனர். இவ் வேண்டுகோள்களில் நாட்டுக்கும் — இனத்திற்கும் —சிறு சமூகத்திற்கும் உரியதான பொதுமைமிகும் வேண்டுகோளுக்கே திரு. க. கனகராசா அவர்கள் செவிசாய்த்து தம் செல்வத்தின் ஒருபகுதியை வழங்கினார்.

நாட்டில் போர் அனர்த்தங்களின் போது தமது சொந்த நாட்டை விட்டுப் பலர் வெளியேறி வேறுநாடுகளில் அகதிகளான போதும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து இந்த நாட்டிற்கு சேவையாற்றியமைக்காக ''தேசாபிமானி'' என்ற சிறந்த பட்டத்தை 1994 ம் ஆண்டு பெற்றுக் கொண்டார். பல்வேறு அமைப்புக்கள், நிறுவனங்கள் பட்டங்களைக் கொடுத்து அன்னாரின் சேவையைப் பாராட்டியுள்ளார்கள். அண்மைக் காலங்களில் தொழில் மந்தகதியில் நடைபெற்றபோதும் தனது உடல்நலம் குன்றியபோதும் தனது சேவையைக் குறைக்காது நன்கு நடாத்தி வந்துள்ளார். மக்களுக்காற்றிய சேவை போதுமென்று மகேசன் தனது சேவைக்காக அன்னாரை 22-07-98 அன்று தன்னுடன் அழைத்துக் கொண்டார். அவர் ஆற்றிய பணிகளைத் தொடர்தலே எமது கடமையாகும்.

சுபம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருபாதம்

# நல்லைக் குருமணியின் இரங்கற் செய்தி

சிவதர்ம வள்ளல் திரு. கனகராசா அவர்களது மறைவு இந்த நாட்டில் எந்தவகையிலும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். மில்க்வைற் என்னும் சவர்க்கார நிறுவனத்தின் மூலமாக இந்த நாட்டில் ஆற்றிய பணிகள் எண்ணிலடங்காதவை. தனிமரம் தோப்பாகாது என்பது கனகராசா அவர்களது வாசகமாகும். அதேபோன்று மனிதனுடைய வாழ்க்கையில் வெளிச்சுத்தத்தை நடைமுறைப்படுத்திய மில்க்வைற் நிறுவனம் 'அகச்சுத்தத்தையும் பேணவேண்டும் என்பது கனகராசாவினுடைய பேராவலாகும். எவ்வளவுதான் துன்பம் இருந்தாலும் மனிதன் சந்தோசமாக வாழவேண்டும் என்பது கனகராசாவினது பெருவிருப்பாகும். ஆகையால் இந்தநாட்டில் என்னென்ன முறைகளைப் பின்பற்றி பணியாற்ற முடியுமோ அவ்வாறான பணிகளை ஆற்றிய மாமனிதர் ஆவார். சமயப்பணியானாலும் சமூகப்பணியானாலும் பொதுப் பணியானாலும் அரசியற்பணியானாலும் கனகராசாவிற்கு நிகர் கனகராசாவே. இனிமையான பேச்சு, சீரான உடை, சொன்னதை செயலில் காட்டும் வீரர். இப்படியான தொழிலதிபரைக் காண்பது இவ்வுலகில் அரியதொரு செயலாகும். அவரது பணிகளை எழுத்தினாலேயோ வாயினாலேயோ எடுத்தியம்புவது இடலாத காரியம். காலத்தின் தேவையறிந்து வாழத் தெரிந்தவர் கனகராசாவாவர். அவரது வாழ்க்கை ஏனையோருக்கும் எடுத்துக் காட்டாகும். இந்த நாட்டில் எங்கு சென்றாலும் ஏதொருவகையில் மில்க்வைற் நிறுவனத்தின் வெளியீடுகள் மனத்தைக் கவரக் கூடியதாக இருக்கும். இப்படிப்பட்ட தனித்துவம்மிக்க நிறுவனத்தை கட்டியாண்டவர் திரு கனகராசா அவர்கள். அவருடைய பிரிவு ஆதீனத்திற்கு பேரிழப்பாகும். ஆதீன ஆரம்பகாலம் தொடக்கம் இன்றுவரை தன்னாலான பங்களிப்பைச் செய்து ஆதீன வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாய் இருந்தவர் திரு. கனகராசா. அவர்களது பிரிவால் துயருறும் அனைவரையும் இறைவன் ஆசீர்வதிக்கவும் கனகராசா அவர்களது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இரண்டாவது குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்த
பரமாச்சாரிய ஸ்வாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மசாந்திப் பிரார்த்தனை உரை

அமரர் சிவதர்மவள்ளல் திரு. கனகராசா அவர்களுக்கு

## சமர்ப்பணம்

"பின்னை நின்றென்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலார்"

என்பது திருமூலரின் அருள்வாக்கு. இதற்கேற்ப மக்கட் சமுதாயத்துக்குப் பயன்படக்கூடிய நற்பிறவியைப் பெற்றவர் அமரர் கனகராசா அவர்கள். காப்பன காத்து கடிவன கடிந்து தன் வாழ்வை ஒழுங்கான பாதையில் அமைத்துக் கொண்டவர் இவர். எந்நேரமும் இறைநாமமும் புன்சிரிப்பும் கவரக்கூடிய முறையில் இவருக்கென்று அமைந்ததவையாகும். தொழில் அதிபர் என்ற முறையில் இப்பெரியாரை நான் மதிக்கவில்லை. பண்பான உள்ளமும், பழுத்த மனத்து அடியவர் தொடர்பும் இப்பெரியாரிடம் காணப்பட்டதையே நான் வெகுவாகப் பாராட்டுகிறேன்.

தமிழகத்துக்கும் காசியாத்திரைக்கும் அங்கு நடைபெற்ற சைவமகாநாடுகளுக்கும் இவர்தம் பாரியாருடன் வருகை தந்ததும் திருக்கேதீஸ்வரம், கிளிநொச்சி குருகுலம் ஆகிய புனித தலங்களுக்கு இவர்களோடு யாத்திரை செய்ததும் எனக்குப் பசுமையான நினைவுகளைத் தருகிறது. எமது பயணம் எந்த விதத்திலும் வீண்வார்த்தைகள் பேசாத அருட்பயணமாக அமைந்ததை எண்ணிப் பார்க்கிறேன். தனது தாயிலும் மேலாக என்னை மதித்த பெருந்தகை. இவர் நல்லதை எண்ணி நல்லதைச் சொல்லி நல்லதை நம்மத்தியில் செயலாற்றியவர் இவர். இன்று நாடு முழுவதும் அன்னாரை நினைக்கக் கூடிய வகையில் அஞ்சலி உரைகள் குவிந்து கொண்டிருக்கின்றன.

காலம் உருண்டோடி விட்டது. உடல்நலம் குன்றிவிட்டது. பேசவும் நடக்கவும் சிரிக்கவும் இயலாத ஒருநிலையில் இப்பெரியாரின் வாழ்வு தளர்ந்துவிட்டதே என்பதில் எனக்கு ஏக்கம். பெரியாரின் மறைவுக்கு முதல்நாள் யாழ் போதனா வைத்திய சாலை ஏழாவது விடுதியின் ஏழாவது கட்டிலுக்கருகில் நான் சென்று பார்த்தபோது ஒரே மௌனம். எம்மை ஏறெடுத்துப் பார்க்காத ஒரு தேக்கநிலை. எனது கண்கள் கண்ணீரைக் காணிக்கையாக அன்னாரின் பாதத்தில் உகுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்''

என்பதை எண்ணிப் பார்க்க வேண்டிய நிலையில் நாங்கள் வாழுகின்றோம். அமரர் கனகராசா அவர்கள் என்றும் எம்நாட்டு மக்களின் உள்ளத்தில் குடி இருப்பார் என்பது உண்மை. அவருடைய ஆத்மா அடைய வேண்டிய இடத்தை அடைந்துவிட்டது. நாம் பிரலாபித்துப் பயன் இல்லை. பிரார்த்தனையாலும் நற்பணிகளாலும் மனிதநேயத்தோடு வாழ்ந்து நாமும் பூரணமடைவோமாக.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

## வாழ்வு

வாழ்வின் இலக்கு துயரைத் தவிர்த்து நித்தியானந்தம் அடைதலே, இவ்வுலகில் பிறப்பு பிரிக்க முடியாதபடி துயருடன் தொடர்புடையது. நீங்கள் துயரம், துன்பம், துக்கம் முதலியவற்றைத் தவிர்க்க விரும்பினால் நீங்கள் மறுபிறப்பைத் தவிர்க்க வேண்டும். பிரம்மஞானமே மறுபிறப்பைத் தவிர்ப்பதற்கு ஒரேயொரு சாதனம்.

★

மன்பதையின் முடிவான அடைவு மனிதஜீவனின் தெய்வீக நிறைவே. ஒருவர் முழு நிறைவு பெற்றிருக்க வேண்டும். உங்களைத் தெய்வத்திற்குத் திறப்பதே தெய்வீக நிறைவுக்கு முக்கிய நிபந்தனை.

— சுவாமி சிவானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை செய், அன்பு காட்டு, கொடுத்துப் பழகு, தூய்மையாய் இரு, தியானம் பயில், அநுபூதியடை

தேசாபிமானி மில்க்வைற் தொழிலதிபர் சிவதர்ம வள்ளல் எமது முன்னாள் உபதலைவர் கலாநிதி கனகராசா அவர்களின் பிரிவு யாழ்ப்பாணம் திவ்ய ஜீவன சங்கத்திற்கு ஒரு பேரிழப்பாகும்.

இமயமலை ஜோதி அருள்மிகு சிவானந்த மகரிஷி அவர்களின் விசுவாசமான சீடர்களுள் ஒருவரான கனகராசா அவர்கள் சுவாமியின் அரிய போதனைகளைக் கடைப்பிடிப்பதிலும், நடைமுறைப்படுத்துவதிலும் சாதனை நிலைநாட்டியவர்.

சிறுவர் அநாதை இல்லங்களுக்கும், பொதுசமய ஸ்தாபனங்களுக்கும் பனம்பொருள் அபிவிருத்திக்கும் அவராற்றிய பங்களிப்பு சிவானந்தரின் முதலாவது போதனையாகிய சேவை செய் என்பதைப் பறைசாற்றுகின்றது.

மற்றோர் எவரிடமும் பகைமை காட்டாது தென்புலத்தாரை ஆதரிக்கும் அவர் பண்பு குருதேவனின் இரண்டாவது போதனையாகிய அன்பு காட்டு என்பதைக் காட்டுகின்றது.

இலவசமாக வழங்கிய அச்சுப்பதிப்புக்கள் தானமாக கொடுத்து எதிர்காலத்தில் பெரிய விருட்சங்களாக மாறப்போகும் மரக்கன்றுகள் தாகம் தீர்க்கும் கிணறுகள், மற்றும் கட்டட உதவிகள் மகரிஷியின் மூன்றாவது போதனையாகிய கொடுத்துப் பழகு என்பதனை நிரூபிக்கின்றது.

வாக்குத் தவறாத அவரது வாழ்க்கை சுவாமியின் நாலாவது போதனையாகிய தூய்மையாய் இரு என்பதைக் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் தினமும் செய்த யோகப்பயிற்சி தியானம் இமயஜோதியின் ஐந்தாவது போதனையாகிய தியானம் பயில் என்பதை நடைமுறைப்படுத்துவதில் ஒரு சிக்கலுமில்லையென்பதை உண்மையாக்குகிறது.

சமீபத்தில் அசௌகரியத்துக்குட்படுத்திய பாதிப்புக்கும் தொழில்வளக் குறைவு மற்றும் நோய்வாய்ப்புற்றிருந்த போதும் மனந்தளராது தன்னம்பிக்கையுடன் எப்போதும் இறையுணர்வுடன் இருந்தது தெய்வீக வாழ்க்கைச் சங்கத்தின் ஸ்தாபகரின் ஆறாவது போதனையாகிய அனுபூதியடை என்பதைத் துல்லியமாக விளக்குகிறது.

அன்னாரின் பிரிவில் துயருறும் அவரின் உற்றார், உறவினர், தொழிலக ஊழியர்களுக்கும் திவ்ய ஜீவன சங்கத்தின் அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

சி. கனகரத்தினம்
யாழ் திவ்யஜீவன சங்கத்தின் தலைவரும்
அரசாங்க சட்டத்தரணியும்
அகில இலங்கை சமாதான நீதிவானும்

உண்மை வாழ்வு தெய்வீக வாழ்வன்றி வேறு யாதும் அன்று; ஏனெனில் கடவுளைத் தவிர ஒன்றும் இல்லை; கடவுள் அன்பே. தெய்வீக வாழ்வை வரவேற்குக. மனிதன் அனந்தானந்தத்தையும் துயரத்தினதும் துன்பத்தினதும் நிவர்த்தியையும் முடிவில்லாது தேடிக்கொண்டிருக்கிறான். உலகியல் வாழ்விலிருந்து மகிழ்ச்சியைப் பெறுதற்கு அவன் தவறும்போது அவன் நித்தியானந்தக் கடலாகிய கடவுள்பால் தன் மனதைத் திருப்புகிறான்.

— சுவாமி சிவானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் ஆயரின் இரங்கற் செய்தி

அமரர் கலாநிதி கனகராசாவை நினைவு கூரும் நிகழ்வில் பங்கேற்பதில் நாங்களும் பெருமகிழ்வுடனும், ஆர்வத்துடனும் இணைந்து கொள்கின்றோம். இவர் சமய, சமூக பொதுநலன் விரும்பியாக ஆற்றிய பணிகள் அளப்பரியன. அவர் சமூகம் கொடுக்காத நிறுவனங்களோ, நிலையங்களோ, கழகங்களோ, கலாசாலைகளோ யாழ் குடாநாட்டில் இல்லையென்றுதான் சொல்லவேண்டும்.

ஆழ்ந்த இறைப்பற்றும், அன்பினிலே வழிந்தோடிய மனித நேயமும் கொண்டவர். எமது மண்ணில் இயங்கி வருகின்ற அனைத்து நலன்புரிச் சங்கங்கள், நிறுவனங்கள் அனைத்தோடும் தொடர்பு கொண்டு மக்களின் நல்வாழ்வுக்காகவும் மனித மேம் பாட்டிற்காகவும் அயராது உழைத்துவந்த உத்தமர். சீரிய பண் பாளராகிய இவர் தம்முடைய அரும்பெரும் நற்பணிகளின் ஊடாக அனைத்து மக்களின் அன்பையும், நன்மதிப்பையும் பெற்றவர் என்பது சொல்லாமலே விளங்கும்.

அன்னாரின் மறைவு யாழ் பிரதேச மக்களுக்கு ஈடு இணை யற்ற பேரிழப்பாகும். அவர் ஆற்றிய பணிகளுக்கு பிரதி நன்றி யாக நாம் செலுத்தும் நன்றிக்கடன் என்னவெனில், அவர் செய்த பணிகளை தொடர்ந்து செய்ய அவர்மேல் நல்மனம் கொண்டோர் பலர் முன்வர வேண்டும் என்பதேயாகும்.

அவர் பணி தொடர முன்வருவோம்
முன்னின்று உழைப்போம்.

யாழ் ஆயர் சார்பாக
ஜே. பி. இ. செல்வராசா
குருமுதல்வர்

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மாநகர ஆணையாளரின் இரங்கற் செய்தி

உத்தியோகக் கடமை காரணமாகக் கொழும்பில் நின்ற நேரத்தில் சிவதர்ம வள்ளலின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தேன். மறைந்த அப் பெரியாருக்கு நேரடியாக இறுதி மரியாதை செலுத்த முடியாத நிலையில் இச்சிறு இரங்கல் செய்தியை அனுப்பி வைக்கின்றேன்.

''அடையா நெடுங் கதவும் அஞ்சேல் என்ற சொல்லும் உடையான்'' ஆக வாழ்ந்த சிவதர்மவள்ளல் கலாநிதி க. கனகராசா அவர்களின் மறைவு தமிழ்கூறும் நல் உலகுக்குப் பேரிழப்பாகும்.

இவரது கரம்படாத பொது நிகழ்வுகள் எதுவுமே இருந்ததில்லை. கொடுத்துச் சிவந்த கரங்கள் இவரது கரங்கள். 'இல்லை, என்று சென்றவர்களுக்கு இவர் என்றுமே 'இல்லை' என்று சொன்னது கிடையாது.

இயற்கையில் ஈடுபாடு மிக்க இவர், வீதி ஓரங்களில் நிழல் தரு மரங்களையும் வீடுகளில் கனிதரு மரங்களையும் வளர்ப்பதில் அதி அக்கறை காண்பித்தார். பனைவளத்தைப் பெருக்குவதில் பெருமுயற்சி எடுத்தார். நாற்றுமேடை அமைத்து நல்ல இனப் பயிர்களை வளர்த்து வந்தவர்களுக்கு எல்லாம் வாரிவாரி கொடுத்தார்.

ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி, நன்னெறி, திருக்குறள் முதலிய நீதிநூல்களை அனைவரும் கற்றுணர வேண்டும் என்ற பெருவிருப்புடன் அவற்றைச் சிறுசிறு நூல்களாகப் பதிப்பித்து பட்டிதொட்டி எங்கும் பரவ விட்டார்.

யாழ் மாநகர சபையுடன் இவருக்குள்ள தொடர்பு மறக்க முடியாதது. பொதுசன நூல் நிலைய ஆலோசனைக் குழுவில் ஓர் உறுப்பினராக இருந்த இவர் ஆற்றிய சேவையையும், யாழ் மாநகர சபை சைவசமய விவகாரக் குழுவின் வளர்ச்சிக்கு இவர் ஆற்றிய பணியையும் என்றுமே மறக்க இயலாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரியை இழந்த பறம்பு போல, சிவதர்ம வள்ளலை இழந்த யாழ்ப்பாணம் 'என்றுனைக் காண்போம் இனி' எனக் கண்ணீர் விட்டு அரற்றுகின்றது.

மக்கள் தொண்டனாக வாழ்ந்து காட்டிய சிவதர்ம வள்ளல் எம்மை விட்டுப் பிரிந்தாலும் அவர் செய்த சேவைகளின் நினைவு என்றுமே எம் மனதை விட்டு மறைய மாட்டாது. மறையவும் முடியாது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த இம் மாமனிதர் காட்டிய வழியில் செல்வதே நாம் அவருக்கு செலுத்தக் கூடிய அஞ்சலி ஆகும்.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைவதாக.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்.

---

# யாழ் மாநகர முதல்வரின் அனுதாபச் செய்தி

பிரபல தொழிலதிபரும் கொடைவள்ளலும் ஆகிய தமிழ்ச் சைவப் பெருமகனார் உயர்திரு க. கனகராசா அவர்கள் அமரரான செய்தி தமிழ்ச் சமுதாயத்திற்கு மாபெரும் இழப்பாகும். தமிழர் பண்பாட்டையும் முன்னோர்களின் மூதுரைகளையும், இயற்கையுடன் வாழும் வழிமுறைகளையும், பனையின் பயன் பாட்டையும் உலகுக்கும் குறிப்பாக தமிழினத்திற்கு வெளிப்படுத்தி செயற்படுத்திய உத்தம வள்ளலாக அவர் வாழ்ந்து காட்டினார்.

அன்னாருடைய இழப்பு தமிழுக்கும், சைவத்திற்கும் மானுட விழுமியம் விரும்பும் தமிழர்கட்கும் ஏற்பட்ட பாரிய இழப்பாகும்.

அன்னாரின் குடும்பத்திற்கும் நம்பிவாழும் அனைவருக்கும் எமது மாநகரசபை சார்பிலும் எனது சார்பிலும் அனுதாபங் களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பொ. சிவபாலன்
மாநகர முதல்வர்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற் செய்தி

## இந்து இளைஞர்களுக்கோர் சிறந்த வழிகாட்டி

ஈழத்தின் பல பாகங்களிலும் வாழ்கின்ற இந்து இளைஞர்களுக்கும் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள இந்து இளைஞர்களுக்கெல்லாம் ஓர் சிறந்த வழிகாட்டியாகவும் யாழ்ப்பாண மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் காப்பாளராகவும் விளங்கிய யாழ்ப்பாணம் மில்க்வைற் தொழிலக அதிபரும் சிவநெறிப் புரவலருமான கலாநிதி க. கனகராசா அவர்கள் இறைபதமடைந்தமையைக் கேள்விப்பட்டு அதிர்ச்சியும் மிகுந்த வேதனையுமடைந்தோம்.

அமரர் கனகராசா அவர்கள் சிறந்த பண்பாளர், அன்புக்கும் மதிப்புக்கும், மரியாதைக்குமுரிய ஓர் பெரியவர் ஆவர்.

அன்னார் இந்து சமய நடவடிக்கைகளுக்கு மட்டுமல்லாமல் மனித நேயம் மிக்க ஓர் சமூக சேவையாளராக எல்லா மதத்தவர்களுக்கும் தன்னாலான உதவியினை நாடளாவிய ரீதியிலே நல்கியுள்ளார்கள் என்பதை நினைத்து இந்து இளைஞர் பேரவையினராகிய நாம் மனநிறைவடைகிறோம்.

அன்னார் நாம் யாழ்ப்பாணம் வரும் வேளைகளிலும் இலங்கை இந்து இளைஞர் பேரவையின் பத்தாவது தேசிய இந்து இளைஞர் மாநாடு யாழ்ப்பாணம் நல்லூரிலே நடைபெற்ற போதும் அளித்த பரோபகாரமான செயற்பாடுகளையெல்லாம் நினைத்துப் பார்த்து அன்னார் இன்று எம்மிடையே இல்லையே என்று நினைத்து மிகுந்த துன்பச்சுமையில் நனைகிறோம்.

அன்னாரின் இழப்பால் இலங்கை இந்து இளைஞர் பேரவையினர் ஓர் சிறந்த வழிகாட்டியை இழந்து தவிக்கின்றார்கள். அவருடைய மறைவு ஈழத்திலுள்ள இந்துமத வளர்ச்சிப் படிகளில் ஓர் வெற்றிடத்தை ஏற்படுத்திவிட்டது.

இங்ஙனம்

**இலங்கை இந்து இளைஞர் பேரவை**

திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# "திருவாலவாயின் சிவதர்ம விருட்சம்"

இல. 527 காங்கேசன்துறைச் சாலையின் திருவாலவாய் என்ற இல்லத்தை அறியாத ஆன்மீகச் செல்வர்கள் ஈழத்திலும் தமிழகத்திலும் இருக்கமுடியாது. இத்துணைப் பெருமைக்கும் அதன் அருமைக்கும் உறைவிடமாக சிவதர்ம விருட்சமாக நிழல் பரப்பிய பேராளன் பெருந்தகைத் தொண்டரடித் தொண்டன் சிவதர்ம பூபதியாக விளங்கியவர் ஸ்ரீமான் க. கனகராசா அவர்கள் இறைவனுடன் இரண்டறக் கலந்தார் என்ற செய்தி எம் இதயத்தை பிழிந்துவிட்டது. அவர் ஒரு நடமாடிய ஆன்மீகப் பல்கலைக்கழகம். ஆன்மீகத்தில் அவரிடம் இல்லாதது உலகில் எங்கும் இல்லாததே. சிறந்த சிவ ஆசார சீலம் மிக்க விபூதி கண்டிகை தூயகதர் ஆடை தரித்த மிக்க தூய அந்தப் புண்ணிய புருஷர் "நம்மிடையே நடமாடிய ஒரு சிவச்சொத்து" அவரைக் "கனக நாயனார்" என கவியோகியார் அழைப்பது சாலவும் பொருந்தும்.

மனித வர்க்கத்தினர் முதல் உலகில் உள்ள தாவர சங்கமம் எல்லாம் அந்த புண்ணிய சிவதர்ம பூபதியை நைந்து இன்று கண்ணீர் கொட்டும் அளவிற்கு அவர் தமது உடலாலும் உள்ளத்தாலும் மிக்க அடக்கத்துடன் சைவ உலகிற்கு தன்னை ஈந்துள்ளார். மில்க்வைற் தொழிலகம் அவரது தர்மத்தின் தரு. மில்க்வைற் செய்தி அவரது உள்ளத்தின் தேட்டம். சமயப் பிரசுரங்கள் அவரது சிவதோட்டம். அற்றார்க்கும் அலர்ந்தார்க்கும் இட்ட நன்னீர் தொட்டிகள், நிழல் மண்டபங்கள் எத்தனை? எத்தனை? அவருடன் வாழ்ந்தவர்கள், உறவாடியவர்கள், உரையாடியவர்கள் அனைவரும் அரிய பாக்கியவான்கள்.

பூவுலக கற்பகதருவை இந்நூற்றாண்டில் அறிமுகஞ் செய்த "மாமனிதர்" அவர். இத்தேசத்தை முழுமையாக அரவணைத்த "தேசாபிமானி", காந்தீயவாதி. நாவலர்க்குப்பின் நாம் கண்ட "சிவதர்ம விருட்சம்" மாவைக் கந்தன் தீர்த்தமாடிய வேளையில் பரம்பொருளாகிய அப்பெருமானுடன் "இரண்டறக் கலந்தார்" உலகினர் அவரை நோக்கி அவர் வழியில் நடப்பாரா? அவ்வாறு நடந்தால் அவரின் ஆத்மா சிவசாயுச்சியம் அடைந்து எல்லார்க்கும் "இன்பந்தரும்".

"ஞானம் நின்புகழே வேண்டும் மிக
சிவமே ஆலவாயிற் சிவபெருமானே"

ஓம் சாந்தி

நயினை நா. வீ. மு. நவரெத்தினம்
யாழ். பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒவ்வொருவர் ஆத்மாவுடனும் பேசியவர்

## நந்தி

தமது வாழ்நாளில் எல்லோராலும் விரும்பப்பட்டவர் அமரர் கனகராசா ஐயா. ஒருவர் வாழும்போது நாம் அவரைப் பாராட்டுவதில்லை, இறந்த பின்பு தான் விழா வைக்கிறோம் என்று பொதுவாகக் கூறுவது உண்டு. ஆனால் கனகராசா ஐயா வாழும் போதே அறிஞராலும், முதியோராலும் இளைஞராலும் பாராட்டப்பட்டவர். அவருக்கு ஆதீனங்கள், சங்கங்கள், கல்லூரிகள், சமூக நிலையங்கள், பாராட்டும் பட்டங்களும் வழங்கின. அவை 40க்கு மேற்பட்டவை.

காரணம், வெறும் சம்பிரதாயம் அல்ல. மனம் வைத்து சேவையும் உதவியும் செய்தார். அதை உணர்ந்தவர்கள், நாம் பிரதி உபகாரமாக செய்யக்கூடியது அவரை அழைத்து உபசாரம் செய்து மகிழ்விப்பது மட்டும் தான் என்று எண்ணினார்கள்.

கனகராசா ஐயா நாட்டின், காலத்தின், மக்களின் தேவை அறிந்து சேவை செய்வதில் மேதை. செய்யும் முறையில் சமூக விஞ்ஞானி. பலனை எதிர்பார்க்காத யோகி.

எத்தனை தேவைகளைக் கண்டறிந்தார்! எத்தனை சாதனைகளைச் செய்தார். அதற்கு எத்தனை பாதைகள்.

அரிவரி மட்டை தொடக்கம் திருக்குறள் திரட்டுவரை அறிவுக்கு சேவை, திருநீற்றுப்பை தொடக்கம் திருமுறைப் பாடல்கள் வரை ஆத்மீக சேவை. மரக்கறி விதைகள் பசு தொடக்கம் யோகாசன விளக்கம் வரை ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டல், குப்பைத் தொட்டி தொடக்கம் பனை, குளம் வரை சூழல் பாதுகாப்பு. இப்படியாக சரஸ்வதியையும், லட்சுமியையும், கௌரியையும் மகிழவைத்தார்.

என்ன செய்வது? கா. சி. குலரத்தினம் ஐயா இப்போது இல்லை. இருந்தால் மில்க்வைற் ஐயாவின் பால் வெள்ளை மனத்தின் மகிமை, மாட்சி ஆட்சி இவற்றின் ஊற்றில் ஒரு காவியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்திருப்பார், '' ஒரு கனகராசாவின் கதை'' யாக, ஐயாவின் வாழ்க்கை நூல் பொதுநல சேவைக்கு மட்டுமல்ல, தொழில் முகாமைத்துவத்திற்கும் வேண்டிய ஆத்மீக பங்கு, நடைமுறைப் பண்பு, உலகளாவிய அன்பு இவற்றைக் காட்டும் பாடநூலாக அமையும். எதிர்கால சந்ததிக்கு அவருடைய வாழ்க்கை நூல் கண்டிப்பாக அவசிய தேவை ஆகும்.

கனகராசா அண்ணா அவர்கள் தனிப்பட்ட முறையில் குலாவும்போது இவர் எமது உடன் பிறப்பா, நண்பனா, ஆசிரியனா, பாரதியின் கண்ணனா என்று எண்ணும் அளவிற்கு அன்பினாலும் பண்பினாலும் தழுவி ஆரவாரம் செய்வார்.

எத்தகைய மனிதன் அவர்! இனி மறக்க முடியாத அமரர். ஏனெனில் அவர் எமது ஆத்மாவுடன் பேசியவர். ஆத்மா இறப்பதில்லை என்பது ஆத்மிக சத்தியம். ஆகவே அவரின் அந்த ஆத்மா மகிழ்ச்சி அடைய அவரைப் பின்பற்றி வாழ்வோமாக!

★

ஓயாத பிறப்பிறப்புச் சுழல். இன்பதுன்பம் மகிழ்ச்சி கவர்ச்சி முதலியவற்றிலிருந்து தப்பி விலகல் இல்லையா? ஆம், நிச்சயமான வழி ஒன்று உளது. உங்கள் மனதைக் கடவுள்பால் திருப்புக. அவர் உங்கள் விடுதலையை விளைவிப்பார்.

★

மனிதன் தன் செயல்கள் அனைத்திலும் வைத்திருக்கும் ஒரே இலக்கு தனக்குத்தானே ஆனந்தத்தை பெறுவதற்கே என்று அனைவரும் ஒப்புக் கொள்கிறார்கள். உண்மையான நிலைத்த ஆனந்தம் ஒருவரின் சொந்த ஆத்மனில் அல்லது அழிவற்ற ஆன்மாவில் பெற்றிருக்கலாம். ஆனால் அழியும் புறப்பொருட்களில் அன்று.

— சுவாமி சிவானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பெற்றிடுக ஞானசோதி!

பொன் பொலிந்த நன்மணமும் புனிதவாழ்வும்
பூலோக கற்பகத்தை யொத்த கையும்
அன்பொழுகு முகமினிய சொல்லும், நோக்கும்
அருளொழுகு செயற்றிறனும் ஒருங்கே தாங்கும்
இன்பமுயர் பெயர்க்கனக ராசா என்னும்
ஏந்தலே அறம்புரியப் பிறந்து வந்து
மின்பரவு சடேசன்அருள் அனைத்து மென்று
மேதினியில் பெரும்பணிகள் புரிந்த செல்வா,

தொழிலாக மிளிரும்மில்க் வைற் என்கின்ற
தூயதா பனத்தாலே பலரின்வாழ்க்கை
எழிலோங்க வைத்ததுடன் செய்தித்தாளால்
இசைவான கல்விநுண் ணறிவுமூட்டி
மொழியான தமிழ்வளர, சைவநீதி
முறைவளர, அறம்வளர, பொருளாதார
வழிவளர, பயிர்வளர, பனையின்செல்வ
வளம்வளர, அயராமல் உழைத்தவள்ளல்,

சித்தாந்த வேதாந்த நூல்களோதி
தெய்வீக யோகாச னங்களாற்றி
வித்தாக்கி விருட்சமாய் வளர்த்தெடுத்த
மெய்யன்பா, புவிநீத்து விண்ணகத்தின்
சுத்தானந் தச்சுவையைத் தேடிச்சென்றாய்
சொற்படிந்த மனையாளும் நீயும்தர்மச்
சொத்தாகி ஆலவாய் இறைவன்பாதச்
சுகம்பொலிந்து பெற்றிடுக ஞானசோதி.

அருட்கவி
சீ. வினாசித்தம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பும் ஆசியும் கிடைப்பதாகுக
## ஆத்மசாந்தி உரை

நாட்டுக்காக, நகரத்துக்காக, ஆலய முன்னேற்றத்துக்காக, சைவமக்களின் முன்னேற்றத்துக்காக, கல்விக்கூடங்களுக்காக, மக்களின் துயர் துடைப்புக்காக, வலுவிளந்தோர் பணிக்காக, ஊன முற்றோர் பணிக்காக, ஆருமற்ற அநாதை இல்லங்களுக்காக அரும்பாடுபட்டு இரவு பகல் என்றும் பாராது, அயராது தன்னை அர்ப்பணித்த பெரியார் திருவாளர் சிவதர்ம வள்ளல், சமாதான நீதிபதி, கலாநிதி. க. கனகராசா அவர்களின் தூல உடல்தான் எம்மைவிட்டுப் பிரிந்தது. அன்னாரின் ஆத்துமாவும், உள்ளமும் எங்கள் அனைவரையும் விட்டுப்பிரியவில்லை. என்பதோடு நிற்க வில்லை. வித்தியாரம்பம் செய்யும் பிள்ளைகள் கண்ணீர் வடிக்கின்றனர். பாடசாலைகள், கல்லூரிகள் கதறுகின்றன. வளாகங்கள் வழுத்தி அழாக்குறையாக காட்சி தருகின்றன. பனைமரச் சோலைகள், தெங்குச் சோலைகள், கனிதரும் விருட்ஷங்கள் அத்தனையும் கதறி அழுகின்றன. உலகத்தொண்டர்கள், சமயப் பெரியார்கள், சாதுகள், சன்னியாசிகள் மாத்திரமல்ல தேவலோக வாசிகள், முதலாக கண்ணீர் சிந்துகின்றனர். சுவர்க்க வாயில் திறந்து வரவேற்று ஆசிகூறி ஆசனம் அர்ப்பணிக்கும் இவ்வேளை யில் அடியேனுடைய ஆத்ம சாந்தி உரையும் ஓர் சிறுதுரும்பாகக் காட்சிதர திருவாலவாயில் கோயில் கொண்டு வீற்றிருந்து அடியார்களுக்கு அருளாட்சி செய்யும் சிவபரம்பொருளையும் அன்னையையும் வழுத்தி நிறைவு செய்கின்றோம்.

இறைபணியில்
**கணேசானந்த மகாதேவ சுவாமிகள்**
மகாதேவ ஆச்சிரமம் கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துசமயப் பேரவையின் அஞ்சலிச் செய்தி

ஈழநாடு பெற்றெடுத்த சஞ்சீவிமலை சிவதர்ம வள்ளல் க. கனகராசா என்றால் அது சாலப் பொருத்தமானது. இவர் செய்யாத பணியென்று ஒன்றில்லை. அனைத்துப் பணிகளிலும் தன்னை இணைத்துக்கொண்ட பெருவள்ளல். இவர் மேற்கொண்ட பசுமைப் புரட்சி, சிவாலயத் திருப்பணி, சமூகப்பணி ஆகியன மக்கள் மனதில் ஆளப்பதிந்தவை. இத்தகைப் பெருமகனின் மறைவு நமது நாட்டிற்கு மாபெரிய இழப்பை ஏற்படுத்தியுள்ளது.

நம்மண்ணில் பலர் சமகால நலனைக் கருத்திற் கொண்டு தொண்டுள்ளத்துடன் சேவைபுரிந்துள்ளார். எனினும் சமகாலநலனுடன் எதிர்கால சந்ததியினரின் நலனையும் கருத்திலமைத்து தொண்டு செய்பவர்கள் மிகச் சிலரே. அவர்களில் மில்க்வைற் அவர்கள் முதன்மையானவர் என்றால் அது மிகையாகாது. மரங்களைப் பாதுகாப்பதும், மரநடுகை இயக்கத்தை விறுவிறுப்புடன் நடாத்துவதும் இவருக்கு கைவந்தகலை. ஓர் அரசதிணைக்களத்தால் செய்து முடிக்க முடியாத சாதனையை இவர் தனித்து நின்று நிலைநாட்டியுள்ளார். இலங்கைத் திருநாட்டில் எந்த இடத்திற்கு காலடி எடுத்து வைத்தாலும் மில்க்வைற் நட்ட மரத்தில்தான் தடக்கிக் கொள்ளுமளவில் அவர்பணி அமைந்துள்ளது. மரங்களைப் பேணுவதன் மூலம் மழை வளத்தைப் பெறமுடியும் என்ற பேருண்மையை உணர்ந்து செயல்பட்ட செயல்வீரன் நமது நாட்டின் நீர்வளம் பேணப்படுவதற்கு இதுவே ஒருவழி என்பது அவர் கண்டறிந்த உண்மை. மழை நீரைத் தேக்க, குளங்களை ஆளமாக்க எங்காவது சிரமதானம் நடந்தால் இவரது தர்மப்பணியும் அங்கிருக்கும். யாழ்ப்பாண மக்களின் பெருவளங்களிலொன்றான பனைவளத்தைப் பேணியவரும் இவரே. இவரது அனைத்துப் பணிகளையும் பார்த்தின்புற்ற பல நிறுவனங்கள் பாராட்டிப் பலபட்டங்கள் வழங்கியபோதும் இவர் பெற்ற பசுமை வேந்தர் எனும் விருது அதி உன்னதமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எந்த ஆலயத்திற்கு சென்றாலும் அங்கு நிறைவுற்று இருக்கும் ஒரு திருப்பணியை மனமகிழ்வோடு செய்துவிட்டு வருகின்ற பெருந்தொண்டன். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் விதித்தபடி பசுவின் சாணத்தில் திருநீற்றைத் தயாரித்து இலவசமாக வழங்கிவந்த பரசமய கோளரி இவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டர் நிறுவனங்களுடனும், தொண்டுள்ளம் கொண்டவர்களுடனும் இவர் கொண்டிருந்த அளவற்ற அன்பால் அத்துறையில் தம்மை அர்ப்பணிப்பவர்களுக்கு பாராட்டும் கௌரவமும் அவ்வப்போது வழங்கி வந்தார்.

இவரது அனுபவ முதிர்வின் பெறுபேறாக இந்துக்களுக்கு ஓர் தலைமை அமைப்பு மிக அவசியம் தேவையானது என்பதைத் திரிகரண சுத்தியோடு ஏற்று இந்து சமயப் பேரவையை அமைக்க முன்னின்று உழைத்தவர்களோடு பக்கபலமாக நின்ற பெருமைக்குரியவர். இந்துசமயப் பேரவை மேற்கொண்ட அனைத்துப் பணிகளிலும் தமது முழுமையான பரிபூரண ஆதரவை என்றும் வழங்கி வந்தமையை இந்நேரத்தில் ஞாபகப்படுத்தாமலிருக்க முடியாது. ஆதரவற்ற முதியோர் குழந்தைகளை அரவணைத்துப் பேணவேண்டும் என்ற நோக்கில் அமைக்கப்பட்ட அனைத்து முதியோர் சைவச் சிறுவர் இல்லங்களின் நலனிலும் மிகுந்த அக்கறையுள்ளவராக இருந்து தம்மாலியன்ற உதவிகளை நியமம் தவறாது செய்துவந்துள்ளார்.

தன் வாழ்நாள் முழுவதும் தொண்டு செய்வதற்காக தன் தொழில் முயற்சிகளை விருத்தி செய்த பெருவள்ளல் சே. பொன் இராமநாதனின் பின் சிவதர்மவள்ளல் எனும் நாமத்தைத் தன தாக்கிக் கொண்ட இப்புண்ணிய ஆத்மா என்றும் ஆடல்வல்லான் பாதங்களின் கீழிருந்தின்புறப் பிரார்த்தித்து வணங்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சி. சக்திகிரீவன்

கௌரவ செயலாளர், இந்துசமயப் பேரவை, யாழ்ப்பாணம்.

---

# அமரருக்கு அஞ்சலி

எமது கழகத்தின் காப்பாளராக இருந்து இன்றைய நாள் வரை அரும் பெருஞ் சேவையாற்றிய மில்க்வைற் தொழிலதிபர், சிவதர்ம வள்ளல், சிவநெறிப் புரவலர் அமரர் க. கனகராசா ஜே. பி. அவர்கள் மறைவு எமக்கு ஆற்றொணாத் துயரையும் துன்பத்தையும் தருகின்றது. அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த துயரத்தையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அன்னார் எமது கழகத்திற்கு ஆற்றிய தொண்டுகள் மறக்க முடியாதவை, சொல்லில் அடங்காதவை. ஆகவே அவரது இழப்பு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

பாலர் கல்விக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர்களும்
பாலர் பாடசாலை ஆசிரியர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் திரு க. கனகராசா அவர்களுக்கு

மறைந்த தங்கள் நிறுவன அதிபர் க. கனகராசா J. P. அவர்கள் சிவபதமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைந்தோம்.

யாழ் பல்கலைக் கழகத்துடன் அன்னாரது நெருங்கிய தொடர்புகள் சிறப்பாக அமைந்ததுடன் எமது சித்தமருத்துவத் துறைக்கும் அதிகளவான உதவிகள் புரிந்துள்ளார். அவரது மறைவு எமது சமூகத்துக்கும், எமது மருத்துவத் துறைக்கும் பேரிழப்பாகும். அன்னாரது ஆத்மா சாந்தியடைய எமது துறைத் தலைவர், விரிவுரையாளர்கள், மாணவர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள் அனைவரும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் நிறுவனத் தலைவரின் மறைவு தங்கள் நிறுவனத்துக்கும் அன்னாரது குடும்பத்துக்கும் பேரிழப்பாகும். ஆனாலும் பிரிவு என்பது தவிர்க்க முடியாத ஒன்று. இவரின் பிரிவைத் தாங்கக் கூடிய மனோதிடத்தை இறைவன் உங்கள் அனைவருக்கும் நல்க வேண்டும் என்று பிரார்த்தித்து எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்தி நிற்கின்றோம்.

க. ஐங்கரன்
செயலாளர்
சித்தமருத்துவ மாணவர் மன்றம்

---

# "வீடு பெறச்சென்றார் விண்ணுலகு"

கற்றிட நல் ஏடுகள் தந்தாய்
கட்டிட நல் ஓடுகள் தந்தாய்
நட்டிட நல் மரங்கள் தந்தாய்
பாடிட நற் பாமாலைகள் தந்தாய்
வாடிடாமல் நல்வழி பலசொன்னாய்
வீடுகளில் தூக்கிட நல் மொழி தந்தாய்
நாடு போற்ற நன்மைகள் செய்த
நற்கனக ராசா வள்ளல்
வீடுபெறச் சென்றார் விண்ணுலகு

—சங்கரத்தையூர் சபாநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் கனகராசா அவர்களுக்கு

## எமது இதய அஞ்சலி

நிமிர்ந்த நன்நடை நேரிய நோக்கு
துணிந்த நெஞ்சம் தூய வெண்ணீறு
இலங்கும் நெற்றி ஏதிலர் யார்க்கும்
வழங்கும் கைகள் மறைந்தன இன்று.

கற்பக தருவை காண்கரிய மூலிகையை
நாற்பாத நல்லறிவை நாவலர்தம் மேனிலையை
நாயன்மார் தம்புகழை நால்வர்தம் திருமறையை
பாரிலே நிலைநிறுத்த பாடுபட்ட அண்ணலவர்.
'சிவதர்ம வள்ளல்', 'சிவநெறிப் புரவலர்'
அமெரிக்க பல்கலையின் அரியதோர் 'கலாநிதி'
'இயற்கை நேசன்' என்றிணையிலாப் பட்டங்கள்
இதயநேசனே உம்மால் ஏற்றம் பெற்றன.

உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளனென்ற உண்மையின்
வண்ணமே வாழ்ந்து வானுல கெய்திய
அண்ணலின் நாமமே அவனியில் வாழ்கவே.

ந. சதாசிவ ஐயர்
காணிப் பதிவாளரும்
மேலதிக மாவட்டப் பதிவாளரும் அலுவலர்களும்

---

## எண்சீர்கழி நெடிலாசிரிய விருத்தம்

திருவருளும் குருவருளும் திகழ்ந்து நிற்கும்
தெளிவமைந்த மில்க்வைற் நிறுவ னத்தின்
பொருவரிய தனிமுதல்வர் கனக ராசா
போற்றுதவு நலங்கொடையில் கர்ணன் தோற்றான்
அருமையுடை நலந்தொண்டில் அப்பர் தோற்றார்
அகங்குழைவு நலச்சிரிப்பில் அனைத்தும் தோற்றேன்
தருவெனவே தானின்று தருவை வைக்கத்
தனியூன்றும் தனித்தொண்டர் கனக ராசா.

கலாநிதி V. இரத்தினசபாபதி
தத்துவ ஆராய்ச்சித் திணைக்களம்,
சென்னை சர்வகலாசாலை, தமிழ்நாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணாவின் பார்வையில் ஐயா!

கடந்த 22-07-98 புதன் அன்று யாழ் மண்ணின் ஓர் மாணிக்கம் மங்கி மறைந்து விட்டது. தனது 71 வது வயதில் அந்த மாணிக்கம் தனது துணைவியாருடன் பேரின்பப் பெருவாழ்வில் கலந்து விட்டது. அண்ணா நிறுவனத்தின் வலக்கை போன்று செயற்பட்ட அந்த மாணிக்கம் வேறு யாருமல்ல சிவதர்ம வள்ளல் கலாநிதி க. கனகராசா ஐயா அவர்களே.

ஏறத்தாழ 41 வருடகால ஏட்டினைப் பின் நோக்கி புரட்டினால் 1957ம் ஆண்டு ஐயாவின் சந்திப்பு எனக்குக் கிடைத்த பின்னர் அவரது மில்க்வைற் நிறுவனத்தின் விற்பனைக்கும் விளம்பரத்திற்கும் இணைந்து செல்லும் வாய்ப்பு கிடைக்குமளவிற்கு அவர் நெருக்கமானார். அவரது நிறுவனத்தில் ஒரு ஊழியராக இணைந்து கொண்டாலும் அவரது அன்புக்கும் பாசத்துக்கும் பாத்திரவாளியாகி என்றென்றும் அண்ணா நிறுவனத்தின் பல்வேறு செயற்பாடுகளுக்கும் பக்கபலமானார்.

வன்னி மண்ணில் வனாந்தரமாக இருந்த பல இடங்களில் ஐயா அவர்கள் கா. சி. குலரத்தினம், பரநிருபசிங்கம் (பரமேஸ்வராக் கல்லூரி உபஅதிபர்) என் போன்றோருடன் தானே களத்தில் இறங்கி பனம் விதைகளை நாட்டி காட்டினை சோலையாக்கி பனங்கூடல்களைத் தோற்றுவித்து கற்பக தருக்களின் பயன்பாட்டினை வலியுறுத்தினார். எத்தனையோ இடங்களில் கற்பகதருக்களை செழிப்பாக வளர்த்தோரை பாராட்டி பொன்னாடை போர்த்தி மரம் நாட்டலை ஊக்குவிப்பு செய்தார்.

யாழ் மண்ணின் பல பிரதேசங்களிலும் இன்று நாம் காணும் வேம்பு, நெல்லி, இப்பிலிப்பில், தென்னை போன்ற பயன்தரு மரங்கள் யாவுமே ஐயா அவர்களையே நினைவு கூருகின்றது. இவற்றின் மூலம் பஞ்சத்தை ஒழிப்பதே ஐயாவின் சிந்தனையாகும். வரண்ட பிரதேசமான யாழ் மண்ணை வளமாக்க குளங்கள்-குட்டைகள் யாவும் நீரால் தேக்கப்பட வேண்டும் என உணர்ந்து, அவரால் சீரமைக்கப்பட்ட குளங்கள் எத்தனையோ பல. இவை யாவற்றையுமே ஐயா ஓர் பெரும் அரசு நிறுவனம் போன்றே உடனுக்குடன் செய்தார். மேலும் ஐயா அவர்கள் கல்வித்துறையிலும் தமது சேவையை விட்டு வைக்கவில்லை. எத்தனையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிநூல்கள், குறள்கள், பொன்மொழிகள், மருத்துவ ஆலோசனைகள், துண்டுப் பிரசுரங்கள், அ, ஆ எழுத்துச் சுவடிகள் என்பனவற்றை வெளியிட்டு பாடசாலை தோறும் நேரடியாகச் சென்று விநியோகம் செய்து கல்வித்துறைக்கு பங்களித்தார். இந்த நற் காரியங்கள் யாவற்றிலுமே அவருடன் சென்று செயலாற்றும் பாக்கியம் எனக்கும் கிடைத்தது.

1959ம் ஆண்டு அண்ணா நிறுவனம் துளிர் விட்டு மலர உரமாக நின்றவர் ஐயாவே. பின்னரும் நிறுவனம் தனது ஒவ்வொரு வருட வளர்ச்சியிலும் காலடிகளைப் 'பதித்து நடைபயில உறு துணையானவர் ஐயாவே. சமயப் பணியிலும் ஐயா தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். என்னையும் தன்னுடன் இணைத்து அம்மா சகிதம் கா. சி. குலரத்தினம், சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி போன்றோருடன் தென் இந்தியா வட இந்தியா எங்குமே தல யாத்திரை மேற்கொண்டு ஒவ்வொரு தலங்களிலும் சமயத்தின் பெருமையைச் சொல்லியும் நூல்கள் மூலம் விளக்கியும் வந்ததுடன் காசி மாநகரில் நடைபெற்ற இந்துமாநாட்டிலும் உரைநிகழ்த்தியும் வந்தார்.

இவை யாவற்றுக்குமே ஐயா நின்று பிடிப்பதற்கு காரணமாய் இருந்தது அவரது குரு சிவானந்த யோகி காட்டிய வழியில் நின்று யோகாசனப் பயிற்சிகளைச் செய்து ஒரு இளைஞனாகவே இருந்து செல்லுமிடங்களில் தானே ஆசனப்பயிற்சிகளை செய்தும் காட்டியமை எனக் குறிப்பிடலாம். மேலும் தமிழாராய்ச்சி மாநாட்டு காலப் பகுதியில் மாநாடு நடைபெற பலவழிகளிலும் உதவி புரிந்தவர் ஐயா அவர்கள்.

செய்யும் தொழிலே தெய்வம், கடமையை செய் என்ற வாசகங்களுக்கு இலக்கணமாகத் திகழ்ந்து வாழ்ந்த ஐயா அவர்கள் என்றுமே அண்ணா நிறுவனத்திற்கு தனது அரவணைப்பை மனப் பூர்வமாகத் தந்து கொண்டிருப்பார் என நம்புகின்றேன்.

நன்றி

சு. பொ. நடராசா
அதிபர்
அண்ணா கோப்பி நிறுவனம்
இணுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஃ

மறைந்த சிவதர்ம வள்ளல் திரு. க. கனகராசா அவர்கட்கு எமது சார்பில் குருகுலச் சார்பில் எமது

# அஞ்சலிச் செய்திகள்

யாழ்நகர்செய் மாதவத்தால் மலர்ந்த கனகராசா
ஊழ்வினை நீக்கும் திருமுறைகள் சிலவற்றை
ஏழிசைப் பண்ணோடு பிரசுரம் பரப்பியநீர்
வாழ்வாங்கு வாழ்ந்து விண்ணுலகம் ஏகினீரோ.

உடலுடையின் அழுக்கினைப் போக்கமில்க் வைற்சோப்பும்
திடமுடனே உயிர்கள் ஆன்மாக் டேற்றம்
அடையவே அருநெறி காட்டும் சிறுநூலும்
அடக்கமாய்த் தந்துசிவன் பாதம் சென்றீரே.

பூவுலகக் கற்பக தருவாம் பனைவிதைகள்
சேவகன்போற் சுமந்துசென்று அவனியெங்கும் நாட்டிய
காவலன் போன்ற கனக ராசாவே
தேவரும் பிரசுரம் வாங்க அழைத்தனரோ.

அவனியெங்கும் தமிழும் சைவமும் பரப்பவெண்ணி
தவப்புதல் வனாய்யாழில் மலர்ந்த சீலனே
தவம்செய் முனிவர்போல் இல்லற ஞானியர்க்கு
புவனியோர் புலம்ப சிவபதம் அடைந்தனையோ.

சமயப் பணிசெய் இல்லங்கட்கும் குருகுலம்
முதலாய அனாதைஇல் லங்கட்கும்
சமயம் பார்த்துப் பொருளுதவி செய்த
சிவதர்ம வள்ளல் புரவலரே
இமயம் முதலாய் இலங்கை வரையும்
இளமையாய் உம்நாமம் துலங்க எண்ணியோ
உமைபாகன் நாமம் உள்ளத்திற் கொண்டு
உலகம் உவப்பப் பணிசெய்து மறைந்தீரோ.

ஸ்ரீ விசுவாம்ப விசாலாட்சி மாதாஜி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறந்திடுமா?

யாழ் நகர்வந்தே கந்தையா மகனாகி
பேரைக் கனவாக்கிப் பிறைபோல் உருவாகி
சீரான கல்வியொடு சிந்தனையை நேராக்கி
கூரான வள்ளுவரின் குறளாயுதங் கொண்டு
தொழிலைப் பெருக்கித் தொழிலால் பொருள்தேடி
எழிலான நாகம்மா இணைய வழிசெய்து
அறத்தின் வழிசென்றே அழியாப் பணியாற்றி
மறத்தல் அறியாத மனதுள் குடிகொண்ட
ஐயாவே, பொன்வேந்தே அவ்வுலகம் போயினையோ?
மெய்யாய் உளம்சோர்ந்து மேல்சோர்ந்து போனோமே
உந்தன் அறப்பணிகள் ஒருநூறு ஆயிரமா?
இந்தத் தமிழ்ஈழம் என்றும் மறந்திடுமா?
அன்னைத் தமிழுமழும் அமுதக் குறளுமழும்
முன்னைப் பழமேட்டின் மூதுரைகள் சொல்லியழும்
குளமும் பனையுமழும்! குறையாப் பயிர்களழும்!
வளமார் நிலமுமழும் வாழுங் குடிகளழும்
இல்லாரு முள்ளாரும் எல்லோருமே யழுவார்
நல்லாரும் வல்லாரும் நாடே அழுமையா!
கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிர்களுமே என்றும் தொழுமையா!
உள்ளத்தாற் பொய்யா தொழுகி உலகத்தார்
உள்ளத்து ளெல்லாமே உள்ளவராய்ப் போனீரே!
நாகத் துணையாளின் நல்லன்பு கிட்டாமல்
ஆகம் சலித்ததினால் அங்கோடிப் போனீரோ?
நீண்டநாள் இங்கே நிகழ்ந்து வருகின்ற
வேண்டாத போரின் விளைவதனால் போனீரோ?
அமரர் உலகினிலும் அருந்தொண்டுள தென்றோ
எமது புவிநீங்கி ஏகினீர்? எப்படியோ
எங்கள் இனம்இந்த ஈழத்துள வரையில்
உங்கள்வழி தொடர்வம் உறுதி நீர்வாழியவே!

''தாமரைத் தீவான்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுலகெய்திய
அமரர் க. கனகராசா அவர்கட்கு

# எமது இதய அஞ்சலி

'மில்க்வைற்' தொழிலதிபர் அமரர் கனகராசா அவர்கள் மறைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும் அளவிலாத் துயரமும் அடைந்தோம்.

'தோன்றிற் புகழொடு தோன்றுக' எனும் பொய்யாமொழிக்கிணங்க எம்மண் செய்த தவப்பயனால் எம்மத்தியில் தோன்றிய பெருமகன் அமரர் கனகராசா அவர்கள்.

தாம் பெற்ற பெரும் பொருளை தமக்கெனப் பேணாது பிறர்க்கீந்து வாழ்ந்த பெருந்தகையாளர், எம்மண்ணில் சைவமும் தமிழும் தழைத்தோங்க நாவலர் வழியில் நற்பணியாற்றி 'சிவநெறிப் புரவலர்' என சீர்பெற்ற பேராளர்.

யாழ்ப்பாண மண்ணின் கற்பக தருவாம் பனைவளம் பெருக்கவும் அதனை அழியாமல் பாதுகாக்கவும் அன்னார் ஆற்றிய அரும்பணியை சிரஞ்சீவியான அக்கற்பகதருக்களே சாட்சிசொல்லும்.

அறநெறி காத்த மண்ணின் மைந்தன் இகவாழ்வு போதுமென்றெண்ணி வானுலகு புக்கார். இம்மண்ணில் அவர் தொடக்கி வைத்த பணிகளை தேங்காது தொடரச் செய்வதே அன்னாருக்கு நாம் செய்யும் அஞ்சலியாகும்.

பிரம்மஸ்ரீ ந. சதாசிவ ஐயர்
செயலர்
நியந்த்ரீ

நல்லூர்,
யாழ்ப்பாணம்.

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்குமோ நெஞ்சம்?

பொன் நிகர்குணமும் பூநிகர் மனமும்
கண்ணெனத் தாங்கிக் காரியம் ஆற்றிய
சிவநெறிப் புரவலர். செந்தமிழ் வித்தகர்.
உவகை தவழும் ஒளிர்மதி முகத்தவர்
மெத்தெனப் பேசும் மேன்மையாம் பண்பினைச்
சொத்தெனக் கொண்டவர், சோர்வி லாதவர்,
காலம் கருதிக் கடமைகள் ஆற்றியே
ஞாலம் புகழ்ந்திட நற்பெயர் கொண்டவர்
பேர்சொல்லும் ''மில்க்வைற்'' தாபனம் நிறுவியே
பாருள்ளோர் பயன்பெறப் பலவழி வகுத்தவர்
ஆன்றோர் காட்டிய அறவழி நின்றவர்
இயன்ற அனைத்தும் இயற்றிய வள்ளல்
கோயில் கட்டியும் குடமுழுக் காற்றியும்
ஆயிர மாயிரம் நன்மைகள் செய்தவர்
அமைதியை நாட்டும் அருங்குணத் திறத்தால்
சமா தானத்தின் தூதுவ ரானவர்
கருணை வடிவாம் அந்தக் கனகராசாஐயா (இறைவன்)
திருவடி நீழல் சேர்ந்தனர் என்ற
செய்தி அறிந்தோம்..... செய்வது அறியோம் .....?
வையகம் போற்றிட வாழ்ந்தவர் போயினும் . .
மறக்குமோ நெஞ்சம் (அந்த) மாண்புடைத் தலைவனை?
இறக்கும் வரையாம் இவர்வழி நின்றே
இதயத்தில் பூக்கும் நினைவு மலர்களால்
அஞ்சலி செய்வோம் ... ஆண்டவன் கழலில்
அன்னார் ஆன்மா சாந்தி பெறுக!

ஓம் சாந்தி!

கைலாசபுரம்.
சென்னை. தர்மலிங்கம் குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மில்க்வைற் ஐயனுக்கு

## எமது பிரிவிரங்கற் செய்தி

வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல், வாழ்வியலில் உச்ச வரம் பாகத் திருக்குறள் பேசும். நாளிதுவரை அது அறிஞர் ஆசார மரபாகச் சிறந்து வந்திருத்தலும் பிரசித்தம். ஆனால் இதற்கும் உச்சமான வாழ்வியலாசாரம் ஒன்றிருக்க வேண்டியதன் அவசி யத்தைத் தமது நடைமுறைச் சாதனையால் நாடு முழுவதும் உணர வாழ்ந்த பெருமகன் நமது மில்க்வைற் ஐயன் சிவத்திரு கந்தையா கனகராசா அவர்கள்.

வாழ்வாங்கு வாழ்தல் ஒன்றும் பெரிதல்ல, பிறரையும் வாழ் வாங்கு வாழ்வித்தலே பெரிது. அதுவே பெருமை. செயற்கரிய செய்வார் பெரியார் என்பது அவர் மேற்கோள். வள்ளுவர் பெரு மைக்களித்த மறுபெயர் ஒளி. ஒளி ஒருவருக்கு உள்ள வெறுக்கை என்ற உற்சாக சக்தி. ஒளி ஒருவற்குள்ள வெறுக்கை திருவள்ளு வரில் கருத்து வடிவம். அதே மேற்கோள் மில்க்வைற் ஐயனில் காட்சி வடிவம் என்பதை 70 ஆண்டுகளாக எண்ணிறந்தோர் கண்டுள்ளனர்.

திருக்குறள் ஒழிபியலில் வரும் பெருமைக்கு மட்டுமன்றி குடிமை குடி செயல்வகைகளுக்கும் அநுபவப் பயன் விழைவோர் இந்த ஐயனிலன்றி அதனைப் பெற்றிருத்தலியலாது என்பது உண்மை மேலுண்மை.

உலகியலோடொத்து நமைப் பிரிந்துபோன இவ்வையனின் அதிமனிதப் பண்புகள் நிலவுலகுக்கு என்றென்றும் நன்முன்மாதிரி யாக நின்று நிலவட்டும்.

பண்டிதமணி மு. கந்தையா
ஏழாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற் செய்தி

இந்த நூற்றாண்டில் மறைந்த மாபெரும் மாணிக்கங்களில் மாமேதை திரு. க. கனகராசா சமாதான நீதவான் அவர்களின் ஆத்மாவும் ஒன்று. மனிதனை மனிதனாகக் காணத் துடித்து மனித இனத்துக்கு சாதிசமய வேறுபாடின்றி பலவகைகளில் சமூக சேவைகள் செய்து அரும்பாடுபட்டவர் மறைந்த மேதை அவர்கள். அன்னாரின் சேவைகளை பலகோணங்களில் இருந்து நோக்கும் போது பத்திரிகைத் துறையில் தர்மத்தைக் காப்பாற்றி வழங்கிய பங்களிப்பு மிகவும் முக்கியமானது. நாட்டுக்கு ஏற்ற நல்லவிஷயங் களையும் நற்பண்புகளையும் நல்லொழுக்கங்களையும் மாணவ மாணவிகளுக்கேற்ற பாடசாலை நற்பண்புகளையும் கருணையுள் ளத்தோடு எழுத்துமூலம் பரப்பிய மாமேதையாவார். இந்தநாட் டின் இயற்கை வளங்களை காப்பாற்ற பலவழிகளில் பங்காற்றி பிரகாசித்த நற்குணம் கொண்ட நற்பண்பாளர் ஆவார்.

அன்னார் தனது பங்களிப்பை சாதி சமய வேறுபாடின்றி செய்ததற்கு உதாரணம் யாழ் முஸ்லீம்களின் பாடசாலைகளில் முஸ்லீம் மாணவர்களுக்கு பல அபிவிருத்திகளில் உதவி கருணை உள்ளத்தோடு செயலாற்றியவர். யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை மேற்கு முஸ்லீம் கலவன் பாடசாலைக்கு தண்ணீர்த் தாங்கி அமைத்து மாணவர்களின் தாகத்துக்கு தண்ணீர் கொடுத்த சமூகசேவையாளர், அது மட்டுமன்றி 21ம் வட்டாரத்தில் உள்ள ஜின்னா வீதியில் அமைந்த முஸ்லீம் சனசமூக நிலையத்துக்கு தள பாடங்கள் தந்து அச்சமூக நிலையத்தை இயக்க வைத்த அருங்குணம் கொண்ட நற்பண்பாளர். இதைப்போல் எத்தனையோ விசயங் களை எடுத்துக் காட்டலாம். இவை யாவும் காலஞ்சென்ற மனித உத்தமர் மாமேதை அவர்களையே சாரும். நாங்கள் 30-10-1990 இல் எங்கள் தாயகத்தை விட்டு வெளியேறியபோது மனம் துடித்து கண்ணீர் விட்டு எங்களை கட்டிப்பிடித்து ஆறாத்துயரத்தில் சாந் தமே உருவாகி வாய்பேச முடியாது நின்ற ''சாந்தியே சமா தானம்'' கொண்டவர் மாமேதை அவர்கள். கொழும்புக்கு வந்த நேரம் மனைவியின் கண் ஒப்பரேசனுக்கு, கொழும்பில் திரிந்து வடபகுதி முஸ்லீம்களை கண்ட இடத்தில் ஆறுதல் சொல்லி தேற்றியவர். என்னைக் கண்டு இரு கரங்களாலும் அணைத்து ஆறுதல் சொன்ன மாமேதை.

இப்படிப்பட்ட அருங்குணம் கொண்ட மாமேதைகளை இவ் வுலகம் இழந்து நிற்பது நமது நாட்டுக்கு பேரிழப்பாகும். யாழ் முஸ்லீம் மக்கள் சார்பாக அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எம் ஜி பசீர் ஜே. பி.
முந்நாள் மாநகரசபை பிரதி மேயர், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற் செய்தி

பத்திரிகை வாயிலாக மனிதருள் மாணிக்கமாக பட்டங்களை பெயருக்கும், புகழுக்குமாக கருதாது ''சிவதர்ம வள்ளலாக'' வாழ்ந்த எமது ஐயா அவர்கள் இறைவனடி சேர்ந்தமையை அறிந்தவுடன் ஒருகணம் இரத்த ஓட்டமே நின்றுவிட்டது. வீட்டில் அனைவரும் வேதனை அடைந்தோம். மனிதன் இப்படித்தான் வாழவேண்டும் என உலகுக்கு வாழ்ந்து காட்டிய ஒரு உதாரண புருஷர் இன்று நம்மிடையே, எமக்கு வழிகாட்ட, எம்மை நல் வழிப்படுத்த எம்மிடையே இல்லை என்று எண்ணுகின்றபோது துடிக்கின்ற நெஞ்சத்துக்கு யாரால் ஆறுதல் கூறமுடியும். பெரி யார் மறையவில்லை. தமிழர் மட்டுமல்லாது எல்லா மனிதர் களின் நெஞ்சத்திலும் என்றும் நிலைத்திருப்பார்கள்.

உரமுள்ள நெஞ்சம் வாழ்வில்
உறுதியாய் வளர்ந்த நெஞ்சம்!
திறமுள்ள நெஞ்சம், நேர்மை
செம்மையால் மலர்ந்த நெஞ்சம்!
அறமுள்ள நெஞ்சம்; என்றும்
அன்புடன் பழகும் நெஞ்சம்!
கலாநிதி கனகராசா ஐயா
கனிவுடன் வளர்த்த நெஞ்சம்!

உழைப்புக்கோர் எடுத்துக் காட்டு
ஒவ்வொரு துறையும் தேர்ந்து
தழைப்பதைக் கண்ணாற் கண்டு
தமிழையும், கைவிடாமல்
நூல்களாய் பொழிந்த செம்மல்
மரணத்தால் இறந்தானில்லை
இழைகின்ற உடலாற் செத்தான்
இதயத்தால் வாழுகின்றான்!

ஐயா அவர்களின் ஆத்மா இறைவனுடன் ஐக்கியமாக எல்லாம் வல்ல ஐங்கரனையும் அன்னையையும் வணங்குகின்றோம்.

செ. சத்தியமூர்த்தியும் குடும்பமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவதர்ம வள்ளலே சிவமாகிப் போனீரோ?

சிந்தனையில் எந்நாளும் சிறப்பான எண்ணங்கள்
சீரோடு பிறந்திடுமோ சிறந்துலகில்
உந்தனையே நினைக்கின்ற உத்தமர் வாழ்விலே
ஒளிவீசச் செய்வாயே எங்குற்றாய்?
கந்தனையே கரந்தொழுதே காலமெலாம் வாழ்ந்த
காருண்ய சீலரே மறைந்தாயோ?
வந்தனை செய்தே வழிபட்டு நிற்கின்றோம்
வள்ளலே நீ இங்கே வாராயோ?

கண்ணியமாய் வாழ்ந்த கனவானே எங்குசென்றாய்?
கதிகலங்கவிட்டுப் போனதேனோ?
புண்ணியமே செய்திட்ட புரவலரே! தர்மவள்ளலே?
புழுவாய்த் துடிக்கின்றோம் நாம்!
வெண்ணிலவாய் தவழ்ந்து தண்ணளி பொழிந்தாயே!
வேதனையை எங்ஙனே மொழிவோம்?
எண்ணிய கருமத்தை திண்ணமாய் முடித்திடும்
எங்கள் தொழிலதிபரே! இனிக்காண்பதெப்போ?

கலகலப்பான பேச்செங்கே? கணீரென்ற குரலெங்கே?
கனிவான சிரிப்பை எங்கே காண்போம்?
சிலசில காலம் சிரித்து நீ வாழ்ந்தாய்
சிவதர்ம வள்ளலே சிவமாகிப் போனீரோ?
பலபலநாளாய்ப் பாடித் துதிப்போம் நின்புகழை
பாரிலுள்ளோர் மறப்பரோ உம்மை?
வெலவெலத்துப் போனோம் நின்பிரிவு கேட்டு
செய்வதறியாது திகைக்கின்றோம் இப்போ!

நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

சைவப்புலவர்
இராசையா ஸ்ரீதரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவதரும வள்ளல், கலாநிதி க. கனகராசா சமாதான
நீதவான் அவர்களது சிவப்பேறு குறித்த

# இரங்கற் பாக்கள்

சிவதரும வள்ளால், சிவதீட்சை சிரோங்க
சைவநெறி காத்து தவஞானி – சிவானந்தர்
போதனைகள் போற்றுமா பரப்பியவ! உம்மறைவால்
வேதனை கொண்டோம் மிக.

கற்பகமாம் நற்பனையின் கோதமில் படன்பாடும்
சுற்றுப்புறத் தூய்மைச் சேவையொடு – பிற்கால
சந்ததியார் சிறுற வாழ, மரம் நாட்டுதலும்
சிந்தையிற் கொண்டீர் சிறந்து

நாடினோர்க்கு உம்முதவி மாறிலாது தந்தவரே
பாடினீர்நம் திருமுறைகள் பக்தியுடனே – கூடினீர்
ஞானிகளாம் மோனந்தனை நண்ணுவார் தம்மோடு
தானமோடு தவமிகவாய்ச் சார்ந்து.

உள்ளத்தாற் பொய்யா தொழுகி யுலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளரான – வள்ளற்
பெரியார் கனகராசா பெற்றிமைநன் கோர்மின்
ஒருவாம லுள்ளத்து ளூற்று.

வாழ்கநின் பணியெலாம் மாவீறு கொண்டு!
வாழ்க மரவளமும் 'மில்க்வைற்' றும் – சூழ்க
சாந்தியுல கெங்கும் சைவசீலமு மோங்குக
நீந்தமி ழேபோற் சிறந்து.

சைவப் புலவர்
கதிர் தணிகாசலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற் செய்தி

மில்க்வைற் தொழிலக அதிபரும், தர்மவள்ளலும், சமூகத் தொண்டனும் ஆகிய உயர்திரு கனகராசா அவர்களது திடீர் மறைவு பற்றி அறிந்து மிகவும் கவலையடைந்தோம். அவர் யாழ்ப்பாணத்தில் சுயஉற்பத்தி முயற்சியில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத முன்னோடியாகத் திகழ்ந்தார். தமிழ் மக்கள் தமது சொந்தக் காலில் மாற்றார் துணையின்றி உறுதியாக நிற்கவேண்டும் என்பதில் நம்பிக்கை கொண்டு முழு முயற்சியுடன் உழைத்தார். தொழில் அதிபர் என்ற குறுகிய வட்டத்திற்குள் தன்னை ஒருபோதும் அடைத்துக் கொண்டதில்லை. தமிழ்ச் சமூகத்துடன் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டார். அதன் அறிவியல், ஆரோக்கிய, ஆன்மீக கலாச்சார வளர்ச்சிக்கு பூரண பங்களிப்பை வழங்கிய பெருந்தகையாக வாழ்ந்து ஏனையோருக்கும் வழிகாட்டினார். இளந்தலைமுறையினருக்கு ஆத்திசூடி, கொன்றை வேந்தன், திருக்குறள் போன்ற பழந்தமிழ் நூல்களில் ஆர்வமும் பயிற்சியும் ஏற்படுத்தி நல்வழியில் வழிப்படுத்த எடுத்துக்கொண்ட முயற்சிகளை தமிழ்ச் சமுதாயம் ஒருபோதும் மறக்கமுடியாது. யோகாசனத்தைத் தானும் பயின்று பயிற்சித்து மற்றவர்களுக்கும் ஊக்குவித்ததன் மூலம் மக்களின் உடல் ஆரோக்கியம் வலுப்பெற அவர் எடுத்த முயற்சிகள் ஏராளம். தனிப்பட்ட ரீதியில் என்மீது வைத்த அன்பை மறக்கமுடியாது கலங்கி நிற்கிறேன். அவரது இழப்பினால் துயருற்றிருக்கும் லட்சக்கணக்கான மக்களில் நானும் ஒருவனாகக் கலந்து நிற்கிறேன்.

அவரது இழப்பினால் தவித்து நிற்கும் உறவினர்களுக்கும் தொழிலக ஊழியர்களுக்கும் எனது அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வணக்கம்

காலி வீதி, அன்புடன்
கொழும்பு. டாக்டர் எம். கே. முருகானந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுதாபச் செய்திகள்

தோன்றிற் புகழொடு தோன்றுக எனும் நல்வாக்கிற்கமைய இவ்வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தவர் சைவச் செம்மல் திரு. கனகராசா அவர்கள். இவரது உள்ளமெனும் கோயிலிலே யாவும் வெள்ளை. இவரது சவர்க்காரத்தைத் தோய்த்தால் வெள்ளை. இஃதிலும் பார்க்க மனமோ பெருவெள்ளை, குணம், பண்பு, நடத்தை யாவும் தூய்மையான வெள்ளை. இன்று இவரது வெள்ளை மனத்தை மானுடர் முதல் மரக்கன்றுகள் வரை வாழ்த்துகின்றன. போற்றுகின்றன,

யோகத்தோடு கூடிய தவவாழ்க்கை வாருங்கள்! வாருங்கள்; என்று அழைக்கும் மனப்பாங்கை இனி எங்கே காண்போம். என் செய்வது! அடியேனின் குருநாதர் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் கூறிய வாசகத்தை இங்கே நினைவு கூருகின்றேன். ''அவனே படைத்தான்! அவனே அழைத்தான்!'' எனவே இறைவன் படைக்கின்றான், படைத்த அவ்விறைவனே அழைக்கின்றான் ஆகவே ''அவனடி தொழுவோம்! ஆறுதல் பெறுவோம்!''

கனகராசா ஐயாவின் ஆத்மா சாந்தி பெறுக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரசங்கபூஷணம், அருட்சொல்வாரிதி
*நடேசன் சிவசண்முகமூர்த்தி* **B. A.**
(ஆசிரிய ஆலோசகர் கல்வி வலயம் II)

---

## கலைவல்லான் கனகர் வாழி

ஆலவாய் தனிலமர்ந்து அறப்பணி பலவு மாற்றி
தாலவாய்த் தலைவ னாகித் தனித்துவம் பெற்றுவாழ்ந்து
சீலத்தால் உயர்ந்த இந்தச் சிவனடி மறவாஅன்பன்
காலத்தால் அழிந்திடாத கலைபல தந்தான் வாழி!

அரிவரி மட்டை தந்தான் அழகிய படங்கள்தந்தான்
வரிவரி யாகநல்ல வள்ளுவன் குறளைத் தந்தான்
சரிசரி யாகநல்ல சவர்க்காரந் தன்னைத் தந்து
பிரியமாய் யாவருக்கும் பெருமதி தந்தான் வாழி!

**சாந்தி குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை என்று கூறாத வள்ளல்

அமரர் க. கனகராசா அவர்களுக்கு

# எமது இதய அஞ்சலி

இல்லை என்றிரப்போர்க்கு இல்லை என்று உரையாத இதயம் உள்ளவர் அமரர் க. கனகராசா அவர்கள் எத்தனையோ வகைகளிற் தன்னிடம் உதவி கேட்டு வந்தவர்களை அன்புடன் வரவேற்று பண்புடன் உரையாடி அகம்மகிழ்வுடன் உதவிகள் புரிந்த ஐயா அவர்களை நாம் மறக்கமுடியாது.

அறம் செய்ய விரும்பு, தருமம் தலை காக்கும், கொடுத்தார்க்கு குறைவில்லை, இட்டுக் கெட்டார் எங்கும் இல்லை என்பன ஆன்றோர் அநுபவ மொழிகள். இவ்வாக்கியங்களை நன்குணர்ந்து அறநெறியில் வாழ்ந்து புகழ் பெற்றவர் இவரேயாகும்.

பாடுபட்டுத் தேடிப் பணத்தை வங்கிகளிற் புதைத்துக் கூடு விட்டு ஆவி போகும் தருவாயில் எதுவும் செய்யவியலாது கலங்குவோரைப் பார்த்து வறியவரின் வயிற்றுப் பசியைத் தீருங்கள். அதுவே, பொருளைச் சேமித்து வைக்கும் சிறந்த வங்கி என்று பொருளுடையார்க்கு அறிவு புகட்டினார் வள்ளுவர். இதன் பிரகாரம் ஐயா அவர்கள் நிலையற்ற செல்வம் பெற்றபோது தான தருமங்கள் செய்து இம்மைக்கும் மறுமைக்கும் உகந்த அழிவற்ற புண்ணியமாகிய செல்வத்தைச் சேர்த்துள்ளார்.

வாழ்விலும் சாவிலும் கொடை ஒன்றே தன் உயிர் இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்த ''கன்னன் போல்'' கொடைக்கு கனகராசா என்று அழியாப் புகழ் பெற்றவர் இவரேயாகும்.

எமது யாழ்; ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் ஆரம்பகால நிர்வாக உறுப்பினராகவும் தற்பொழுது எமது சங்கப் போசகராகவும் பணியாற்றிய பொதுநலத் தொண்டர் அமரர் க. கனகராசா அவர்களுக்கு சங்கத்தின் சார்பில் அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

வைத்தியகலாநிதி
N. சிவராசா
தலைவர்

சமூகஜோதி
கா. கணேசதாசன் ஜே பி
செயலாளர்
யாழ் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவதர்ம வள்ளல் அமரர் க. கனகராசா அவர்களின்
மறைவையொட்டி யாத்த

## இரங்கற் பாக்கள்

நேரிசை வெண்பா

கறந்த பாலிற் கன்னல் கலந்த மொழியுடையார்
சிறந்த கனகராசா தார்மேற் – பிறந்த
எழுபதொடு ஒன்றில் சிவபதம் சென்றார்
தொழுவோநாம் ஆன்மசாந்தி எய்ய.

பனை நாட்டிப் பாரெலாம் பண்புபெறவே
வினை காட்டி வாழவழி காட்டி – மனையில்
உறங்காது நல்வினையால் ஊரார் மகிழ
அறங்காக்க எத்தனித்தாய் காண்.

நீர் வளத்தைப்பேண நிலமகளைத் தாழவெட்டி
கார் வளத்தைக் காக்கும் கனகராசா - ஏர்வளத்தில்
பொன்கொழிக்கப் பூதலத்தோர் போற்றியே என்றும்
உன்பெயரைச் சொல்வார் உவந்து.

பாசமுடன் பாகமதில் பார்வதிபோல் பாரியுடன்
வாசுகியும் வள்ளுவரும் வாழ்ந்தன்ன – நேசமுடன்
செல்விருந் தோம்பி வருவிருந்து காத்துநின்றாய்
பல்லார் பதைக்கின்றாரின்று பார்,

க. சுப்பிரமணியன்
முன்னாள் கணக்காளர்
மில்க்வைற்

---

## புகழ்பாடுவோம் வாரீர்

தேரினில் இவர்ந்துசென்ற திருவுடைக் கனக ராஜன்
காரினில் சென்றுசென்று கனவெலாம் நனவாய்க் கண்டான்
பாரினில் இவனால்பெற்ற பயன்களோ அனந்தமையா!
நேரினில் ஒன்றுகூடி யவன்புகழ் பாடு வோமே.

எம். எஸ். இராசையா - சாந்தி அச்சகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவநெறிப் புரவலர் அமரர் திரு. க. கனகராசா ஐயாவுக்கு திருகோணமலை மக்கள் வழங்கும்

# அனுதாபச் செய்தி

சான்றோர்கள் வாழ்ந்த மகத்தான வாழ்க்கை நெறிகளினதும் சமய, சமூக இலக்கியங்கள் கூறும் நெறிநின்றும் உத்தமனாக வாழ்ந்தவர் திரு. கனகராசா ஐயா அவர்கள். இவருடைய இலக்கிய வாழ்க்கைக்குக் கிடைத்த சிவநெறிப் புரவலர், சிவதர்ம வள்ளல், சிவநெறிச் செல்வர், சமாதான நீதிபதி, கலாநிதி, பசுமை நேசன் போன்ற பட்டங்கள் இவர்கள் மேல் முத்திரைகளாக பொறிக்கப்பட்டன. இந்த முத்திரைகள் இவரை ஒழுக்க சீலராக உள்ளும் புறமும் அடக்கமும் பணிவும் உடையவராக ஆத்மீகவாதியாக சமய சமூகத் தொண்டராக உயர்த்தியதோடு அகங்கார மமகாரங்களை களைய காரணிகளாகவும் அமைந்தன.

அமரர் க. கனகராசா ஐயாவுடன் திருகோணமலையிலும் யாழ்ப்பாணத்திலும் பல சந்தர்ப்பங்களில் பழகியிருக்கிறேன். அவருடைய உடை, நடையும் அவரது கண்டிப்பு, கண்ணியம், இனிமையான குரலும் இப்போதும் எனது மனதில் பதிந்து நிற்கிறது.

சுவாமி சிவானந்த குருமகராஜ் அவர்களை ரிஷிகேசத்தில் தரிசித்து அவரை தீட்சா குருவாக ஏற்றுக் கொண்டவர். திருகோணமலை வரும்போது எப்போதும் சுவாமி சிவானந்தரிடம் சந்நியாசம் பெற்று சிவானந்த தபோவனத்தை ஸ்தாபனம் செய்த சுவாமி சச்சிதானந்த சரஸ்வதி மாதாஜி அவர்களையும் யோகிராஜ் சுவாமி, சச்சிதானந்த மகராஜ் அவர்களையும் தரிசிக்கத் தவறுவதில்லை.

திருகோணமலையில் சிவயோக சமாஜத்தாபகர் பிரம்மஞானி சுவாமி கெங்காதரானந்தா அவர்களிடம் குருபக்தியுடையவராக தங்கியிருப்பார். திருக்கோணமலை இந்து தாபனங்களுக்கும் கிராமப்புறங்களிலுள்ள ஆலயங்களுக்கும், பாடசாலைகளுக்கும் உதவியதோடு சமய, சமூக, கல்வி, கலாச்சார வளர்ச்சிக்கும், விவசாய உற்பத்திக்கும் பனை அபிவிருத்திக்கும் உதவினார்.

மில்க்வைற் தொழிற்சாலையை உருவாக்கி தொழில் வாய்ப்பளித்ததோடு திருவாலவாய் இல்லத்தை கலைக்கோயிலாக அமைத்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை சிவயோக சமாஜ ஸ்தாபகர் ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா அவர்களின் உபதேசப்படி ''மரணம் என்பது ஜீவனைப் பொறுத்தவரையில் புதிய சக்தியும், உற்சாகமும், புது ஆற்றலும், திறமையும் உயிரில் உருவாகும் ஒரு புனிதமான நிகழ்ச்சி'' என்பது போல சிவசிந்தனையுடன் சிவபதமடைந்த திரு கனகராசா ஐயா அவர்களின் மரணச் செய்திகேட்டு மனம் கலங்கி அழுத உற்றார், உறவினரோடு அவரது பசுமைப் புரட்சியில் வளர்ந்த மரங்களும் அழுதன என்பது பொருத்தமானதாகும். அவரது ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்போமாக.

ஞானசிரோமணி, சைவப்புலவர்
திருக்கோணமலை பண்டிதமணி இ. வடிவேலு

---

# உயிர்களுக்கும் உயிர் கொடுத்த வள்ளல்

இந்த 20ம் நூற்றாண்டில் ஈழத்திரு நாட்டில் தோன்றிய சான்றோர்களில் ஒருவர் தான் பால் வெள்ளை உள்ளம் கொண்ட திருவாளர் கனகராசா அவர்கள். இப்பெரியார் தம் வாழ்நாளில் சமுதாயத்துக்கு செய்த சேவை புதுமையானது, அளப்பரியது. இவரது உள்ளமும் சேவையும் தூய்மையானது. திருக்குறளை பரப்பினார். யோகாசனத்தை பரப்பினார். மூலிகைகளை, மரங்களை உண்டாக்கினார்.

மரங்கள் தேவதைகளுக்கு ஒப்பானது. இப்பூமியில் உயிர்வாயு (அதாவது உயிர்களை உயிருடன் வாழவைக்கும் பிராணவாயு) உண்டாக்கும் மரங்களையும் இப்புவியில் வாழும் அத்தனை ஜீவராசிகளுக்கும் பிராணவாயு அவசியம். சூழல் மாசை நீக்குகிறது. இதற்காக இப்புவியில் மரங்களையும் வாழவைத்தார்.

எமது குறளமுதம் அமைப்பிற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்தவர். சமுதாயம் அறநெறியில் சிறந்து விளங்க ஆற்றிய சேவை மறக்க முடியாதது.

அதிபர் குறளமுதம்

திருவள்ளுவர் இல்லம்,
294, உட்துறைமுக வீதி,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற் செய்தி

பெரியார் கனகராசா அவர்கள் 22.07.98ல் எம்மை விட்டுப் பிரிந்தார் என்ற துயரச் செய்திகேட்டு ஆழ்ந்த கவலையடைந்தேன், ஒரு தொழில் அதிபராக யாழ்ப்பாண மாவட்டத்தில் அவர் ஆற்றிய பணிகள் அளப்பரியது. சொல்வதைச் செயலில் செய்து காட்டிய பெருமை அவருக்குண்டு. ''சொல்வதுயார்க்கும் எளிது அரியது சொல்லிய வண்ணம் செயல்'' என்ற வள்ளுவர் கூற்றை கடைப்பிடித்து வாழ்ந்தவர்.

கிராமங்கள், வீதிகள், பொதுஇடங்கள், பாடசாலைகள், தினைக்களங்கள், நிறுவனங்கள் தோறும் மரம் நடுகையைப் பிரபல் படுத்தியதோடு கல்விப் பணியிலும் சிறுகுழந்தைகளின் அரிச்சுவடி முதல் திருக்குறள், நன்னெறி நூல்கள், மகான்களின் போதனைகள் வரை நூலகங்களுக்கும் பாடசாலைகளுக்கும் நிறுவனங்களுக்கும் வழங்கிய பெரியார் இவர்.

சுகாதார சேவையில் குப்பை கூளங்களை அகற்ற ஆவன செய்து சுகாதார வசதிகள் செய்து குடிநீர் வசதிகளையும் ஏற் படுத்தியதோடு ஆரோக்கிய வழிகளை பிரசுரங்கள் மூலம் பரப்பியவர்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு தொழில் அதிபராக மட்டும் நின்று விடாது சிவதொண்டனாக, இல்லற ஞானியாக நண்பனாக வழிகாட்டியாக வாழ்ந்து காட்டியவர். அவரது பரந்த நெற்றியில் திருநீற்றின் ஒளியும், கழுத்தில் உருத்திராட்ச மாலையும் அவரைக் காண்போர் கைதொழ வைக்கும் அருள்நெறியாளராக எளிமையுடன் வாழ்ந்தார், இப்பெரியாருடன் நீண்ட காலமாக நெருங்கிப் பழகிய வாய்ப்பு எனது பேறு ஆகும். எனது கடமைக் காலத்தில் பல்வேறு பணிகளை இவருடன் சேர்ந்து செய்தமை மறக்கமுடியாதவையாகும். அவரது துணைவியார் அவரது வலதுகரமாக இருந்து பணிசெய்து வாழ்ந்தவர். இப் பெரியாரது எல்லா சேவைகளும்அவரை நினைவுபடுத்திக்கொண்டே இருக்கும். இவரது ஆத்ம சாந்திக்கு வேண்டுவதுடன் உற்றார் உறவினருக்கும் ஆழ்ந்த கவலையை தெரிவித்துக் கொள்கிறேன்.

**க. பரமலிங்கம்**
பிரதிப் பிரதம செயலாளர்
மாகாண பொது நிருவாகம்,
வடக்கு கிழக்கு மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் தேசத்தின் பொக்கிஷமே!

கலியுகத்தின் அவதாரவள்ளல் கனகராசாய்யா நினை
கவிதையின் வடிக்க என்கைகளும் சோருதய்யா
புவியகத்தில் நீசெய்த புண்ணிய கருமங்கள்
கவியதனில் அடங்குமோ கனகராசாவே!

வானம் அழுததய்யா இவ்வையம் அழுததய்யா
கான ஒலிஎழுப்பும் கருங்குயிலும் ஓய்ந்ததய்யா
தானமென நின்வாழ்வை தரணிக்கு ஈந்தவா
ஏனய்யா சென்றீர் எம்மண்ணின் மகாத்மாவே!

ஈரெட்டுப் படியேறி ஆலவாய் அடைவேன்யான்
ஓரிரண்டு கரம்கூப்பி நின்அடி தொழுவேன்யான்
ஆசியும் வழங்கி எந்தைபோல் அமுதவாக்கும் சொல்வாய்
ஆர்உனைப்போல் எந்தையே இவ்வவனிதனில் உதிப்பார்

வருவோர்க்கும் போவோர்க்கும் வாரிவழங்கும் செங்கரங்கள்
நிறைவான வாழ்வுக்கு ஆரோக்கிய ஆலோசனைகள்
பொறுமை கடலில் பெரிதுஎன பொன்மொழியும்தான்கூறி
பெருமையிலா மணங்காட்டு வெள்வேட்டியும் சால்வையும்
அணிந்தே.

மாலவன் அருகிருக்க மணிமாளிகையின் நடுவிருந்தாய்
காலையும்மாலையும் கதிரவனின் வணக்கம் செய்தாய்
வேலைநேரத்தில் வெகு மதியாய் பணிசெய்வாய்
பாலைஒத்த வெள்ளுளத்தாய் ஆலவாய் அருட்திருவே!


அன்பொடு ஒரு வார்த்தை கேட்டேன்
ஆராய்ந்த பேரறிவு நானும் கண்டேன்
இல்லாளுடன் சேர்ந்தஇனிய குளிர்நகை கண்டேன்
ஈகைக்கே கரம்நான்காய் இருவிரும் இருக்கக்கண்டேன்.

ஓம்ஓம் என ஓதும் எந் தந்தையே
ஒளி விளக்காய் சமூகத்தில் திகழ்ந்தவரே
அணையாத தீபமாய் அகத்துள்ளே மிளிர்கின்றாய்
இணையிலா நின்ஆத்மா என்றும் சாந்திஅடைந்திடுக!

திருஆலவாய் தெய்வங்களின் பக்தை (சாயி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்

எமது குடும்பத் தலைவரும் மில்க்வைற் நிறுவன அதிபருமாகிய

**கலாநிதி க. கனகராசா ஜே.பி. அவர்களின்**

சுகயீனத்தின் போது சேவையாற்றிய யாழ் போதனா வைத்தியசாலை உயர் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், Dr. சிவநேசன், Dr. Mrs. நாகேந்திரா, Dr. ஆனந்தராசா மற்றும் இல்ல வைத்தியர்களுக்கும் கொழும்பில் தமது சேவையை மனப்பூர்வமாக வழங்கிய Dr.சிவபாலசுந்தரம், Dr.கணேசரட்னம், Dr. சிவானந்தன் Dr. நிமலன், மற்றும் Dr. Mrs. Pillai ஏனைய வைத்தியருக்கும் அன்னாரின் மறைவுக்காக பத்திரிகைகளிலும், தனித்தும் கண்ணீர் அஞ்சலி செலுத்திய நிறுவனங்கள், தனிநபர்கள், சபைகள், மலர் மாலை, மலர்வளையம் சாற்றியவர்கள், தபால், தந்தி, நேரிலும் இறுதி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், ஆறுதல், தேறுதல் கூறி அனைத்து வகையிலும் உதவியவர்களுக்கும், பாடசாலைகள், தேவஸ்தானங்கள், சங்கங்கள், வாசிகசாலைகள், அண்டை அயலவர், உறவினர், பொதுஸ்தாபனங்கள், வர்த்தகர்கள், அரச திணைக்களங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், எமதுநிறுவன ஊழியர்கள், முன்னாள் ஊழியர்கள், அண்ணா தொழிலகம் மல்ரி ஒயில் மில், சாந்தி அச்சகம் ஏனைய வர்த்தக நிறுவனங்களுக்கும், மற்றும் அன்னாருக்கு திருகோணமலையிலும், வன்னியிலும், நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இரங்கல் கூட்டம் நிகழ்த்தியவர்களுக்கும் விசேட ஆராதனை செய்தோர்க்கும், மற்றும் இந்தியா, கனடா, லண்டன், ஜேர்மனி, பிரான்ஸ, நோர்வே போன்ற இடங்களில் இரங்கற் கூட்டங்கள் நிகழ்த்திய மக்கள், நிறுவனங்களுக்கும், உள்நாட்டு, வெளிநாட்டு பத்திரிகை நிறுவனங்களுக்கும் பெரியோர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

21-08-98

மில்க்வைற் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

ஔவையார் அருளிச்செய்த

# விநாயகரகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
ஐந்து கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புத நின்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென துளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னிற்
திருவடி வைத்துத் திரமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
யுவட்டா வுபதேசம் புகட்டியென் செவியிற்
றெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
யைம்புலன் றன்னை யடக்கு முபாய
மின்புறு கருணை யினிதெனக் கருளிக்
கருவிக ளொடுக்குங் கருத்தினை யறிவித்
திருவினை தன்னை யறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயி லொருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பி னாவி லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
யமுத நிலயையு மாதித்த னியக்கமுங்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தி னீரெட்டு நிலையு
மூடற்சக் கரத்தி னுறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமு
மெண்முக மாக வினிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்தி
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக் கருளி
யென்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கு மனமு மில்லா மனோலயந்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்
திருள்வெளி யிரண்டுக் கொன்றிட மென்ன
வருடரு மானந்தத் தழுத்தியென் செவியில்
லெல்லை யில்லா வானந்த மளித்து
அல்லல் களைந்தே யருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
யணுவுக் கணுவா யப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமு நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
யஞ்சக் கரத்தி னரும்பொரு டன்னை
நெஞ்சக் கருத்தி னிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாடல்கள்

## விநாயகர் வணக்கம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

## தேவாரம்

திருநாமம் அஞ்செழுத்தும் செப்பா ராகில்
    தீவண்ணர் திறம்ஒருகால் பேசா ராகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழா ராகில்
    உண்பதன்முன் மலர்பறித்திட்டு உண்ணாராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
    அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்தும் செத்துப்
    பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே,

## திருவாசகம்

வேண்டத் தக்க தறிவோய் நீ
    வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன்மார்க் கரியோய் நீ
    வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டிநீ யாது அருள் செய்தாய்
    யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண் டென்னில்
    அதுவும் உன்றன் விருப்பன்றே.

## திருவிசைப்பா

ஏகநா யகனை இமயவர்க் கரசை
    என்னுயிர்க் கமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற்கு அருளிப்
    பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
    மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
    உண்டென உணர்கிலேன் யானே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்

## திருப்புகழ்

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்கமன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தி அச்சகம் - யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org